KN/MULANKAVIL M.V (NATIONAL SCHOOL)
அறிவு வளர் அகிலம் ஆள்
1971.08.21

# கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)

# முழவம்-01

மாணவ முதல்வர் வெளியீடு

2024









கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்
(தேசிய பாடசாலை)

# Kn/Mulankavil Maha Vidyalayam
# (National School)

# முழவம்

# ~1~

## 2024

திகதி – 2024.09.11

இடம் - கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்

## பாடசாலைக்கீதம்

முத்தமிழ் கல்வியை தித்திக்கவே நிதம்
முன்னிற்கும் எங்கள் வித்தியாலயம்
வித்தகமாய்க் கல்வி விரும்பி நாம் கற்கும்
முழங்காவில் என்றும் வாழியவே!

ஆசிரியருடன் அதிபரும் சேர்ந்து
அரிய நற்கலைகளைத் தந்திடவே
சீரிய கலைகளால் சிறக்கும் வித்தியாலயம்
சிறப்புடன் வாழிய வாழியவே!

வாழையின் பசுமை வனப்புடன் ஓங்கிட
வண்ண பொற்பழனங்கள் நெல்மணி சிந்திட
நாளைய சிறுவரைத் தலைவர்களாக்கும்
நல் மகா வித்தியாலயம் வாழியவே!

நாற்றிசை எங்கும் நின் புகழ் ஓங்கிட
நலமுடன் மாணவர் கலைகளைக் கற்றிட
சீர்புகழ் கம்பன் வள்ளுவன் தோன்றிட
தித்திக்க வாழய வாழியவே
வாழியவே வாழியவே வாழிய வாழியவே!

## கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்

## (தேசிய பாடசாலை)

### மகுடவாசகம்

அறிவு வளர் அகிலம் ஆள்

### MOTTO

"GROW THE KNOWLEDGE AND ROLE THE WORLD"

### நோக்கக்கூற்று

மாறிவரும் நவீன உலகில் சவால்களை எதிர் கொண்டு வெற்றி பெற்று கலாசார விழுமியங்களுடன் கூடிய சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் பண்புடைய நற்பிரஜைகளை உருவாக்குதல்.

### VISION

COMPETING THE CHALLENGES IN THE DEVOLOPING MODERN WORLD,PROVIDE BETTER CITIZENS WHO CREATS AN ENERGETIC SOCIETY WITH VALUES AND CULTURE.

### பணிக்கு கூற்று

"பாடசாலை நோக்கி வரும் சிறார்களை அறிவு,திறன், மனப்பாங்கு விருத்தியுடன் ஆளுமை மிக்க நற்பிரஜைகளாக உருவாக்குவோம்."

### MISSION

BRINGING UP THE CHILDREN, WHO COME TOWARDS THE SCHOOL TO LEARN AS BETTER CITIZENS WITH KNOWLEDGE,SKILLS,ATTITUDES AND GREAT PERSONALITY.



# முன்னுரை

கிளி/முழங்காவில் மகா வித்தியாலய மாணவ முதல்வர் சபையினால் இவ் வருடம் ‘‘முழவம்’’ எனும் சஞ்சிகையினை வெளியிட தீர்மானித்துள்ளோம். அதற்கமைவாக மாணவர்களதும் ஆசிரியர்களினதும் பயன்மிக்க ஆக்கங்களை தாங்கியதாக ‘‘முழவம்’’ என்ற பெயரில் சஞ்சிகை வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்வு அடைகின்றோம்.

நீண்ட கால வரலாற்றைக் கொண்ட இப்பாடசாலையின் மாணவ முதல்வர் சபையினால் எந்தவொரு வெளியீடும் வெளிவராச்சூழலில் இவ் வருடமாவது எமது முதல்வர் சபையினரால் பல்வேறு செயற்பாடுகள் புதிய நோக்கில் முன்னெடுக்கப்பட்டன அவற்றுள் ஓர் நிகழ்வாக ‘‘சஞ்சிகை வெளியீடு’’ அமைந்திருப்பதனை இட்டு நாம் பெருமைப்படுகின்றோம்.

எமது பாடசாலையின் பெயரையும், ஊர் பெயரையும் நிலைநாட்டும் வகையிலும் எமது பாடசாலையின் பண்பாட்டு நடவடிக்கையினை வெளிக்கொணரும் வகையில் ‘‘முழவம்’’ என்ற பெயரினை சூட்டி இச் சஞ்சிகையினை பிரசவிக்கின்றோம். மிகவும் குறுகிய காலத்தில் இச் செயற்பாட்டினை முன்னெடுக்கக்கூடியதாக இருந்தமையால் மிக பரந்த அளவில் இதனை வடிவமைக்க முடியாமல் போனமைக்கு மனம் வருந்துவதோடு, எமது பாடசாலையின் மாணவ முதல்வர் சபையினால் இச் செயற்பாடு பயனுறுதி மிக்க வகையில் மிகச்சிறப்பாக முன்னெடுக்கப்படும் என்ற நம்பிம்பிக்கையோடு ‘‘முழவம்’’ மலர எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

இம் மலர் வெளிவர ஒத்துழைத்த அனைத்து நல்லுள்ளங்களிற்கும் பல கோடி நன்றிகள்.

வாழி!!வாழி...முழவம் வாழி!!

பல்லாண்டு தொடர என்றும் எம்

வாழ்த்துக்கள்.....

ஜெ.டிலக்சன்  
மாணவத்தலைவர்,  
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

## வாழ்த்துரை



கிளி/முழங்காவில் மகா வித்தியாலயத்தின் மாணவ முதல்வர் சபையினால் வெளியிடப்படும் "முழவம்" என்ற மாணவ முதல்வர் சஞ்சிகை தனது கன்னி வெளியீட்டினை தொடங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மாணவ முதல்வர்களின் சிந்தனையின் விளைவாக உருவாக்கப்பட்டுள்ள இச் சஞ்சிகை சிறப்பான சிந்தனை, விவேகம் ,ஊக்கம், ஆய்வுத்திறன் என்பவற்றை வெளிக்கொண்டு வருவதற்கும் மாணவர்களின் தலைமைத்துவத்தை விருத்தி செய்வதற்கும் "முழவம்" உதவியாக அமைகின்றது.

இந்த இதழில் மாணவர்களுக்கு தேவையான தலைமைத்துவ கட்டுரைகளும், மாணவத் தலைவர்களுடைய ஆக்கங்களும் வெளிவந்துள்ளன."முழவம்" தொடர்ந்து வெளிவர வேண்டும். இப்பாடசாலையில் குறிப்பாக மாணவத் தலைவர்களால் ஆக்கங்கள் வெளிவர முன்மாதிரியான செயற்பாடாக இது திகழ வேண்டும்.இவர்கள் பணி தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

<u>நன்றி</u>

பத்மநாதன் ஆனந்தராசா.
அதிபர்,
கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்.

## பிரதி அதிபரின் உள்ளத்திலிருந்து



கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலய அன்னையின் மாணவர் முதல்வர் சபையால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் “முழவம்” என்ற சஞ்சிகை வெளியீடானது வரலாற்று சிறப்புமிக்க பெருமைமிகு நிகழ்வாகும்.

முழங்காவில் அன்னையின் மைந்தர்களின் ஆற்றலை வளர்த்தெடுப்பதில் இச் சஞ்சிகை வருடாவருடம் முக்கிய பங்கு வகிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எதிர்காலத்தில் எமது சமூகத்தில் புதுமைகள் படைத்திடும் புரட்சித் தலைவர்களாக மிளிரும் ஆளுமை கொண்டவர்களை உருவாக்குவதில் இச் சஞ்சிகை வெளியீடும், மாணவர் முதலவர் தினமும் அமையும். மாணவர்களின் தலைமைத்துவத்தை வளர்ப்பதில் மாணவர் முதல்வர்சபை முக்கிய பங்கு வகுக்கின்றது. பாடசாலை மட்டத்திலும் அதற்கு வெளியிலும் ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகளில் ஈடுபடுவதும் பாராட்டத்தக்க விடயமாகும். இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இம்முயற்சியானது தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதுடன் கால மாற்றத்திற்கேற்ப படைக்கப்படுவதும் முக்கியமானதாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் பிரதேசத்தில் 50 வருடங்களையும் தாண்டி அறிவுப்பசி நீக்கி நிமிர்ந்து நிற்கும் அன்னையின் கிரீடத்தில் மேலுமொரு வைரமாக மாணவர் முதல்வர்களால் தூரநோக்கோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இம்முயற்சியும் அழகு சேர்க்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

பாலச்சந்திரன் மதனரூபன்.<br>பிரதி அதிபர்<br>கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்,

## சிரேஸ்ட மாணவத் தலைவர் சிந்தனையில் இருந்து



2016ஆம் ஆண்டு நாம் கால் வைத்த போது இப் பாடசாலையின் செல்லக் குழந்தைகளாக நாம் வழிநடத்தப்பட்டோம். எமது பாடசாலையின் மாணவர் தலைவர்களாக நாம் தரம் 5இல் எவ்வளவு தான் தலைமைத்துவப் பண்புடன் நடந்து கொண்டு ஏனைய மாணவர்களை வழி நடத்திய போதும் தேசிய பாடசாலைக்கு வந்ததும் நாம் குழந்தைகளாகப் பராமரிக்கப்பட்டோம். எனக்குள் ஆச்சரியமாக இருந்தது. அப்போதிருந்த எனது மாணவத் தலைவர்களால் நாம் அன்பாகவும் பண்பாகவும் வழிநடத்தப்பட்டோம்.

அன்றே என் மனதில் பதிந்தது நான் மாணவத் தலைவனாக வர வேண்டும். இவர்களைப் போல எமது பாடசாலையை நன்றாக வழிநடத்த வேண்டும் என்று.

அன்றிலிருந்து இன்றுவரை மிகத்திறமையாக முகாமைத்துவக்குழுவின் வழிநடத்தலினால் எமது பாடசாலையில் சிறந்த ஒழுக்கமுள்ள நல்ல பிரஜைகளை சமூகத்திற்கு உருவாக்கி வந்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இன்று 2024இல் நான் இப் பாடசாலையின் சிரேஸ்ட மாணவத் தலைவனாக தெரிவு செய்யப்பட்டமைக்கு என்னை வழிநடத்திய எமது அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், முகாமைத்துவக் குழுவினர் மற்றும் எனது முன்னோடிகளைத் திகழ்ந்த மாணவத் தலைவர்களே காரணமாக அமைகின்றனர்.

ஆன்று எனது கைபிடித்து வழிநடத்திய மாணவரின் நற்பண்புகளை மனதிற் கொண்டே இன்று அனைத்து மாணவர்களினதும் தலைவனாக என்னை உருவாக்கி அனைத்து சூழ்நிலைகளிலும் என்நிலை தவறாது முன்னோக்கிச் செல்லவும் பிரச்சினைகளை தீர்த்துக் கொண்டு அனைவருடனும் ஒரு சுமூகமான உறவினை மேற்கொள்ளவும் முடிகின்றது.

உண்மையிலே எமது பாடசாலையின் அதிபர், உபஅதிபர், முகாமைத்துவக்குழு, ஆசிரியர்கள், மாணவர்களின் அர்ப்பணிப்பும், விட்டுக் கொடுப்பும், ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கும் தான் எமது பாடசாலையின் தலை நிமிர்வுக்குக் காரணம் எனலாம்.

நாம் பாடசாலையில் கல்வியை மட்டுமன்றி தலைமைத்துவம், விட்டுக் கொடுப்பு, சகிப்புத் தன்மை, பிரச்சினைகளைத் தீர்த்தல் போன்ற பல பன்முகப்பட்ட சூழமைக் கூறுகளை பெற்றுக்கொள்கின்றேம்.

இது எமது வாழ்க்கைக்கு மிகவும் தேவையான ஒன்றாகும். மனித வாழ்க்கையில் இளமை என்பது சிறிது காலம். அதில் பள்ளிப் பருவம் என்பது மிக சொற்ப காலம் ஆகினும் ‘‘வளரும் பயிரை முளையில் தெரியும்’’ என்பதற்கிணங்க நாம் பிற்காலத்தில் எவ்வாறு உருவாகப் போகின்றோம் என்பது எமது பள்ளிப் பருவத்தில் தெரிந்து விடும்.

நாம் இங்கு சரியாக வளர்க்கப்பட்டால் நம் எதிர்காலமும் சரியாக அமையும். எனது வாழ்விலும் இப்பள்ளிப் பருவகாலம் நிறைய அனுபவங்களையும் அறிவையும் தந்துள்ளது. இது எனது பிற்கால வாழ்வுக்கு மிகவும் உதவியாக அமையும். என்னை சிறந்த தலைமைத்துவஆளுமையான ஒரு நல்ல மனிதனாக வளர்த்து விட்ட எனது பாடசாலைச் சமூகத்திற்கு என்றென்றும் நன்றியுடையவனாக இருப்பேன். இதுபோன்று எமது அடுத்து வரும் சந்ததிகளும் சிறப்பான ஒழுக்கமுள்ள மனித சமுதாயமாக உருவாகும். எமது பாடசாலை அதனை உருவாக்கும் என வாழ்த்துக் கூறி நிற்கின்றேன்.

"கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக"

<u>நன்றி</u>

பா.பாமதுரன்
சிரேஸ்ட மாணவத் தலைவன்
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.



2024ஆம் ஆண்டு பாடசாலை மாணவத்தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள்



பாலசுரேஸ் பாமதுரன்
Com(2024)
அன்புபுரம்,முழங்காவில்
0771383606



சற்குணராசா சுவேதன்
Tech(2024)
நாச்சிக்குடா,முழங்காவில்
0769153865



உவைர்.M.அஸ்ரின்
Com(2024)
நாச்சிக்குடா,முழங்காவில்
0768939572



சூரியவரராப் திபோசன்
Com(2024)
சோலை, பல்லவராயன்கட்டு
0768481228



அல்வின் அக்சன்
Com(2024)
தேவன்பிட்டி, மன்னார்
0772899070



பத்மசீலன் ஜோன்கெனடி
Com(2024)
இளநிலா,முழங்காவில்
0770237773



ரவிக்குமார் பிரியதனுசன்
Com(2024)
தேவன்பிட்டி, மன்னார்



குமாரகுலசிங்கம் ஜினோத்
Arts(2024)
குமுழமுனை,முழங்காவில்
0711636025



இஸ்ரீபன் ஜயந்தகுமார்
Maths(2024)
வைத்தியசாலைவீதி,
முழங்காவில்
0776917939



சிவகரன் டனுசயன்
Arts(2024)
குமுழமுனை,முழங்காவில்
0779550513



பிரகாஸ் நிலவழகன்
Arts(2024)
நாவலர்வீதி,முழங்காவில்
0770717702




கருணாகரன் டிலக்சன்
Maths(2024)
கணேசபுரம்,வெள்ளாங்குளம்
0778708176



ஜெகதாசன் டிலக்சன்
Tech(2024)
அன்புபுரம்,முழங்காவில்
0774025136



சிவலோகநதன் தர்மீகன்
Tech(2024)
கணேசபுரம்,வெள்ளாங்குளம்
0778751172



றஞ்சித்குமார் மதுசன்
Tech(2024)
மார்க்கண்டுவீதி,முழங்காவில்
0778375042



கயேந்திரன் துவாரகன்
Tech(2024)
இளநிலாகுடியிருப்பு,முழங்காவில்
0773762343



பிரபாகரன் விதுசாயினி
Tech(2024)
கரியாலைநாகபடுவான்
பல்லவராயன்கட்டு
0760565401



மகேந்திரன் கம்சா
Arts(2024)
நாவலர்வீதி,முழங்காவில்
0761882285



நகுலேஸ்வரன் சனோபா
Arts(2024)
வைத்தியசாலைவீதி,
முழங்காவில்
0770579552



ரவிக்குமார் எப்சிபா
Arts(2024)
குருபரன்வீதி,முழங்காவில்
0764376277



ரவிக்குமார் பியூலா
Arts(2024)
குருபரன்வீதி,முழங்காவில்
0764376277



இராஜசேகர் விதுசிகா
Tech(2024)
மார்க்கண்டுவீதி,முழங்காவில்
0775735224



காசிராசா மதுமினி
Tech(2024)
சிகானுவீதி,முழங்காவில்
0766485893



ஸ்ரீரங்கநாதன் ஆரணிகா
Tech(2024)
சோலை,பல்லவராயன்கட்டு
0776756391



இராசரத்தினம் நிதுஷா
Arts(2024)
31ஆம்கட்டை,மன்னார்வீதி,
முழங்காவில்
0767797341



பிரபாகரன் பிரியங்கா
Arts(2024)
கரியாலைநாகபடுவான்
பல்லவராயன்கட்டு
0779837150



யூயின்மக்சின்மில்லியன் ஜெஸ்மினி
Com(2024)
செபஸ்ரியார்புரம்,முழங்காவில்
0770258666



புவனராசா ஜெனோசா
Arts(2024)
குமுழமுனை,முழங்காவில்
0778669867



நவனீதராசா தேன்விழி
Arts(2024)
31ஆம்கட்டை,முழங்காவில்
0741470205



ஞானரூபன் டிலக்சியா
Arts(2024)
அன்புபுரம்,முழங்காவில்
0743068417



கதிரேசன் தமயந்தி
Arts(2024)
கிராஞ்சி,சிவபுரம்
0768407082



மதியூவன் ருஸ்யா
Arts(2024)
அன்புபுரம்,முழங்காவில்
0770783361



சிவஇந்திரன் ஜஸ்மிலா
Com(2024)
கரியாலைநாகபடுவான்
பல்லவராயன்கட்டு
0772794271



சிவானந்தமூர்த்தி டிலக்சனா
Arts(2024)
குருபரன்வீதி,முழங்காவில்
0768866462



ரவிக்குமார் டிலக்சனா
Arts(2024)
மாரக்கண்டுவீதி,முழங்காவில்
0768866462

## தலைமைத்துவம்

நிறுவனம் ஒன்றின் பணியாளர்களை நெறிப்படுத்துவதில் முக்கிய பங்குபெறும் ஒரு கருமமாக தலைமைத்துவத்தைக் குறிப்பிடலாம். ஒருவர் ஒரு கருமத்தை எவ்வாறு ஆற்ற விரும்புகிறாரோ அவ்வாறே ஏனையோரையும் தொழிற்பட வைக்கும் கருமம் எனலாம்.எப்பொழுதும் தலைவன் தமக்குக் கீழுள்ள பணியாளர்களை அல்லது தன்னைப் பின்பற்றுவோரை தான் விரும்பியவாறு தொழிற்பட வைக்கும் ஆற்றல் மிக்கோணாக இருப்பான்.˙

நிறுவனம் ஒன்றிலுள்ள பணியாளர்களை சிறப்பான முறையில் வழிநடத்தி அவர்களிடமிருந்து தன்னிச்சையான பங்குபற்றலையும் ஒத்துழைப்பையும் பெற்று அவற்றினூடாக நிறுவன நோக்கை வினைத்திறனுடன்அடைந்து கொள்ளும் செயன்முறை தலைமைத்துவம் எனப்படும்.

**தலைமைத்துவம் பற்றி பலர் வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர்.**

- ‘‘சரியானதை சரியாகச்செய்தல்.’’ - Peter Drughor
- ‘‘தலைவர் தான் அடைய வரும்பிய வேலைகளை ஏனையோரைச் செல்வாக்குக்கு உட்படுத்தி அவர்களை அவற்றை மேற்கொள்வதற்கு முன்வர வைக்கின்ற தொடர்பே தலைமைத்துவமாகும்’’ – George R.Terry.
- ‘‘தீர்மானமெடுக்கும் அதிகாரம் பற்றிய பயிற்சியே தலைமைத்துவமாகும்’’ – Dulsin 2000
- ‘‘குறிப்பிட்ட இலக்கினை அடைவதனை நோக்கி ஒரு குழவை செல்வாக்குச் செலுத்தும் ஆற்றல் தலைமைத்துவமாகும்.’’ – Steepan.P.Robbins
- ‘‘தலைமைத்துவம் என்பது ஏனையோரின் நடத்தைகளை இயைபுபடுத்தி நெறிப்படுத்தும் சக்தியாகும்.’’ – Flee-1984
- ‘‘நோக்கங்களை அடைவதற்கான ஒரு சுழ்நிலையில் ஒருவருக்கொருவர் செல்வாக்குக்கு உட்படுத்தப்பட்டு தொடர்பு கொள்ளுதலே தலைமைத்துவம்’’ – Robert Tannem Baum
- குழுவின் பணிக்குழு குறிக்கோளை அடைவதற்காக அர்ப்பணிப்புடனும் ஆட்களின் விருப்பத்தைப் பெறும் கலை செயன்முறை தலைமைத்துவமாகும் – Weitech And Koonts -1993

இவ்வாறு இன்னும் பலர் வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர்.

**சிறந்த தலைவர்**

| | | |
|---|---|---|
| L | LIBERATE | பணிகளின் போது உடனிருந்து தீர்மானம் எடுப்பவர் |
| E | ENCOURAGE | பின்பற்றுவோருக்கு அவசியமான நேரத்தில் தைரியம் வழங்குபவர் |
| A | ACHIEVE | அமைப்பின் அடைவை எட்டுபவர் |
| D | DEVEOLP | தனிநபரையும் அணியையும் அமைப்பையும் விருத்தி செய்வார் |
| E | EXAMPLE | முன்மாதிரயாக திகழ்வார் |
| R | RELATIONSHIP | தொடர்புகளை கட்டியெழுப்புவார் |

(கையேடு-NIE)

தலைமைப்பண்பு இருந்தால் தான் புதுமையான சிந்தனைகளை வெளிக்கொணரமுடியும். ஒரு நாட்டை வழிநடத்துபவர் தேசத்தலைவர் குடும்பத்தை வழிநடத்துபவர் குடும்பத்தலைவர் ஒரு பாடசாலையை வழிநடத்துபவர் பாடசாலைத்தலைவர் பள்ளி கல்லூரியில் மாண மாணவியரை வழிநடத்துபவர் மாணவத்தலைவர் என்கின்றோம். அவர்கள் மற்றவர்களை வழிநடத்தும் தலைமை பண்பைக் கொண்டிருப்பதால் அவர்கள் தலைவராக இருக்கின்றனர்.

நல்ல தலைவனாக இருக்க சரியான பரிதலம் தீவிரமான பற்று, கொள்கை, படிப்பு ஆற்றலும் தேவை. வெறும் அறிவு மட்டுமே இருந்தால் ஒருவருக்கு தலைமைப் பண்பு இருக்கிறதென கருத முடியாது. அறிவுடன் அனுபவம் மற்றவர்களை மதித்து நடக்கும் பண்பு இவை எல்லாவற்றையும் கொண்டவர் தான் நல்ல தலைவர் எனலாம்.

**தலைமைத்துவத்தின் முக்கிய இயல்புகளும் பண்புகளும்**

- நிறுவன இலக்கை அடைய பணியாளர்களை நெறிப்படுத்தல்.
- எதிர்கால துூரதரிசன நோக்கைக் கொண்டிருத்தல்.
- ஏனையோரின் நடத்தைகளை செல்வாக்குக்குட்படுத்துபவராக விளங்கல்.
- நிறுவன பணியாளர்களின் செயற்பாடுகளை ஒன்றினைத்து நெறிப்படுத்தல்.
- தமது பணியாளர்களிடையே உயர் மனப்பாங்கு ஒழுக்க விழுமியங்களை விருத்தி செய்தல்.
- நிறுவன இலக்கை அடையும் வகையில் பணியாளர்களை ஊக்கப்படுத்தல்.
- பொறுப்புக்கள் சவால்களை ஏற்கும் மனோபாவம் கொண்டிருத்தல்.
- எதிர்பாரா நிலைமைகளுக்கு முகங்கொடுக்கவும் ஆபத்துக்களை ஏற்க தயார் நிலையில் இருத்தல்.
- சிறந்த தலைவர் மானிடத்திறன் கொண்டவராக வினைத்திறன்மிக்க தொடர்பாடல்திறன் கொண்டவராகவும் இருத்தல்.
- சிறந்த தொழினுட்பத்திறன் கொண்டவராக இருத்தல்.

**“Huneryager and Heekman” என்பவர்களின் கருத்துக்களின்படி நிறுவனங்களில் பொதுவாக நான்கு தலைமைத்துவம் காணப்படக்கூடியதாக இருக்கும் எனக்குறிப்பிட்டனர்.**

| | |
|---|---|
| 1. சர்வாதித்தலைமைத்துவம் | அதிகாரம் மூலம் ஊழியர்களை வழிநடத்துவர். |
| 2.ஜனநாயகத்தலைமைத்துவம் | பணியாளர்களிடம் ஆலோசனை பெறப்பட்டுதீர்மானம் மேற்கொள்வார். |
| 3.எதேர்ச்சி அதிகாரத்தலைமைத்துவம் | தீர்மானங்களை மேற்கொள்வதோடு ஊழியர் சந்தேகங்கள் தீர்க்கப்படும். |
| 4.கட்டுபாடற்றதலைமைத்துவம் | இங்கு ஊழியர்களுக்கு கூடிய சுதந்திரம் வழங்ஙப்பட்டிருக்கும். |

**அதிபர்களிடம் காணப்படவேண்டிய தலைமைத்துவப் பண்புகள்**

- நிறுவன நோக்கு இலக்கை நோக்கி பயணிப்பவராக இருத்தல்
- சமூகத்தின் முன்மாதிரிளாக தொழிற்படல்.
- நேர முகாமைத்துவத்தினை பின்பற்றல்.
- சிறந்த இடைத்தொடர்பை பேணிவருதல்.
- சமூகத்தினை விளக்கி அதன் சடங்கு சம்பிரதாயங்களுடன் ஒன்றிப்போதல்.
- பாடசாலைக் சட்டங்களை பொறுப்புணர்வுடன் நடாத்துதல்.
- பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம் நலன்விரும்பிகளுடன் நல்லுறவைப்பேணல்.
- பாராட்டுத்தன்மை, கண்டிக்கும் இயல்பை கொண்டிருத்தல்.
- பக்கச்சாற்பற்ற நடுநிலையாளராகத் தொழிற்படல்.
- ஆசிரியரின் தொழில்வாண்மை விருத்திக்கு உதவுபவராக இருத்தல்.
- நிபுணத்துவ ஆற்றல் மிக்கவராக இருத்தல்.
- போதனா தலைவராக தொழிற்படல்.
- ஒழுக்க விருத்தி ஆளுமையை கொண்டிருத்தல்.
- உறுதியான வினைத்திறனான முடிவுகளை எடுத்தல்.
- தொடர்பாடல் திறன் உடையவராக இருத்தல்.
- பொறுப்புக்களை சிறப்பான முறையில் பகிர்ந்தளிப்பவர்.
- சிறந்த மதிப்பிட்டாளராக, மேற்பார்வையாளராக இருத்தல்.

**ஆசிரியர்களிடம் காணப்படவேண்டிய தலைமைத்துவ பண்புகள்.**

- பாடவேலைத்திட்டம், பாடத்திட்டமிடல் ஆகியவற்றை சிறப்பாக திட்டமிடல்.
- வகுப்பறையில் உகப்பான கற்றல் சூழலைப்பேணல்.
- கற்றல் வளங்கள், முறையியல்கள் , மாணவர்கள் பாடவிடயம் தொடர்பாக சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ளல்.
- கற்றல் குறிக்கோளை விளங்கி செயற்படுத்தல்.
- வளமுகாமை,நேரமுகாமை பேணுதல்.
- உள்ளார்ந்த ஊக்கல்களை வழங்கி ஊக்கிவித்தல்.
- பெற்றோர் மற்றும் சமுதாய உதவிகளை பெறமுயற்ச்சித்தல்.
- மாணவர் அடைவு மட்டத்தினை வகுத்து, அதற்கான தீர்மானங்களை எடுத்தல்.
- மாணவருடைய பிரச்சினையை தீர்த்தலும், வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கலும்.
- இணைபாடவிதான செயற்பாடுகளை மாணவர்களிடம் இனங்கண்டு திட்டமிட்டு செயற்படுத்தல்.
- அதிபருடனும், ஏனைய ஆளணியினருடனும் இணைந்து செயலாற்றுதல்.
- மாணவரின் விருப்பு, தேவைகளை இனங்கண்டு கற்றற் சூழலை அமைத்தல்.

**மாணவத் தலைவர்களிடம் காணப்படவேண்டிய தலைமைத்துவப் பண்புகள்**

- பாடசாலை சட்டதிட்டம், விதிமுறைகளை மதித்து நடத்தல்.
- அதிபர், ஆசிரியர்கள் ஏனைய ஊழியர்களின் வழிகாட்டலை மதித்து செயலாற்றுதல்.
- மாணவர்களின் செயற்பாடுகளை சிறப்பாக ஒழுங்கமைத்தல்.
- முன்மாதிரியாக தொழிற்படல்.
- பாடசாலையின், இலக்கு, நோக்கை அடைய ஏனையவருடன் இணைந்து பணியாற்றல்.
- பாடசாலை ஒழுக்க விழுமியம், கலாசாரம், பண்பாடு என்பவற்றை போணுபவராக இருத்தல்.
- சிறந்த தொடர்பாடலை போணுபவராக இருத்தல்.
- பாடசாலை நிகழ்வுகளை பொறுப்புணர்வுடன் இணைந்து நடத்தக்கூடியவராக இருத்தல்.
- நிபுணத்துவ ஆற்றல்மிக்கவராக இருத்தல்.
- பாடசாலை கல்வி, இணைபாடவிதான செயற்பாடுகளில் ஆர்வம் மிக்கவரக இருத்தல்.
- பொறுப்புகளை சரியாக பகிர்ந்து பாடசாலை வளர்ச்சி அல்லது முன்னேற்றத்திற்காகப் பாடுபடுபவராக இருத்தல்.
- நேரத்தினை வினைத்திறனாக பயன்படுத்தக் கூடியவராக இருத்தல்.

- பாடசாலை வளங்களை பாதுகாக்கக்கூடியவராகவும் பாடசாலைக்கு விசுவாசமுடையவராக இருத்தல்.

நன்றி...



திருமதி. அருள்செல்வி இந்திரபாலா
(Sci.Trd,BA,PGDE,MDE,SLPS III)
உதவி அதிபர்,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

# எனது வெற்றிப்பாதையில் முழங்காவில் மகா வித்தியாலயம்

## பாடசாலையில் இணைவு......

கிளி பல்லவராயன் கட்டு இந்து தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 1தொடக்கம் 5 வரை ஆரம்பக் கல்வியினைப்பெற்றுக்கொண்ட நான்இடைநிலைக்கல்வி அப்பாடசாலையில் இல்லாத காரணத்தால் முழங்காவில் மகா வித்தியாலயத்தில் சேர வேண்டிய தேவை ஏற்பட்டது. நான் வசித்த இடமான பல்லவராயன் கட்டிலிருந்து துவிச்சக்கர வண்டியில் வெகுதூரம் பயணம் செய்து எனது கல்வியினைத்தொடர்ந்தேன்.

நான் இப்பாடசாலையில் சேர்ந்த போது இப் பாடசாலைச்சூழல் மூன்று பக்கங்களிலும் சுற்றிவரை காடும் நடுவிலே மூன்று கட்டடங்களை கொண்ட வகுப்பறைகளும் காணப்பட்டன. இயற்கை எழிலோடு அமைந்திருந்தமை எங்களுடைய மனதில் மகிழ்ச்சியினை ஏற்படுத்தியது.

இங்கே நான் கல்விகற்ற காலத்தில் இப் பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்கள் எங்களுடைய குடும்ப பின்னணியை அறிந்து நாம் கல்வியை கற்க சகல வழிகளிலும் உதவி புரிந்ததோடு பெற்றோரோடும் நட்புரீதியான உறவை பேணினர். இதனால் பெற்றோரும் ஆசிரியர்கள் மீது நட்புரீதியானஉறவை பேணினர். இதனால் ஆசிரியர்கள் எம்மை சரியான வழியில் வழிநடத்தி என்னுடைய இந்த வெற்றிக்கு காரணமாக அமைந்தனர்கள்.

## என்னுடைய வெற்றிப்பாதை.......

எங்களுக்கு கற்பித்த கணித பாட ஆசிரியரான நாகேஸ்வரன் ஆசிரியர் எம்மை எப்பொழுதும் உற்சாக படுத்தியதோடு "நீங்கள் உங்களுடைய இலட்சியத்தை நோக்கி நடவுங்கள் நிச்சயம் அதனை அடைவீர்கள்" என்று சமூகத்தில் உயர்ந்த பதவிகளை சுட்டிக்காட்டுவார். அந்த வகையில் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற அவா என்னுள்ளே எழுந்தது. ஆசிரியராக சிறந்த சேவை வழங்க வேண்டும் என்னும் இலட்சியம் என்னுள் எழந்தது. எனக்கு கற்பித்த ஆசிரியர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தினை சொந்த இடமாக கொண்டவர்கள். அன்று யுத்தம் நடக்கும் பிரதேசமாக இப் பிரதேசம் காணப்பட்டது. இதனால் ஆசிரியர்கள் தொடர்ச்சியான வரவின்மை இருப்பினும் வரும் காலத்தில் முழுமையாக தங்கியிருந்து கற்பித்தனர். தனியார் கல்வி நிலையங்கள் இல்லாத அக் காலத்தில் இவ் ஆசிரியர்களை நம்பியே எமது கற்றல் இருந்தது. இதனால் ஒரு ஆசிரியராக உருவாக வேண்டும் என்ற எண்ணம் என்னுள் எழுந்தது.

**எனது பாடசாலைக்காலமும் இன்றைய சூழலும்...**

நாம் கல்வி கற்ற காலத்தில் எமது கல்விச்செயற்பாட்டிற்கு வீட்டிலும் பாடசாலையிலும் பூரண ஒத்துழைப்பும் கவனிப்பு இருந்தது. இதனால் பெற்றோரை பாடசாலைக்கு தேவையின்றி எங்களுடைய குறை கூற அழைத்தது இல்லை. பெற்றோர் வழக்காடு மன்றம் சென்றதும் இல்லை தண்டனை பெறாது நாம் கற்று இந்நிலைக்கு வரவில்லை.தண்டனைக்குரிய காரணத்தை அறிந்து பிழை திருத்தி இன் நிலை அடைந்தேன்.இதற்கு நேர் மறையாக இன்றைய செயற்பாடுகள் காணப்படுகின்றன. பெற்றோரும் பிள்ளைகளின் பிழைகளை மறைத்து அவர்களுக்கு துனைபோகிறார்கள். ஒட்டு மொத்ததில் அன்றைய ஆசிரியர்கள் கண்ணும் கருத்துமாய் கனிவுடன் கற்பிப்பவர்களாகவும் பெற்றோற்கள் ஒரு துளியும் தம் பிள்ளைகள் பழக்க வழக்கத்திலும் ஒழுக்கத்திலும் குறைந்து விடக்கூடாது என்பதிலும் நீதி, நேர்மை, வாக்கு, நாணயம் பிறரால் மதிக்கப்படும் ஒரு நபராகவும் வளர வேண்டும் என்பதில் மிக உறுதியோடு இருந்தார்கள் இதற்கு மாறாக இன்றய நிலைமை காணப்படுகின்றது.

**இப் பாடசாலையின் என் எதிர்கால கனவு....**

மாவட்ட மாகாண தேசிய ரீதியில் பெயர் சொல்லக்கூடிய வகையில் சிறந்த மாணவச்செல்வங்களை உருவாக்க வேண்டும். கல்வி மட்டுமின்றி சுய ஒழுக்கம், சிறந்த பண்பு, பிறரை மதிக்கும் பழக்கவழக்கம் கொண்ட நன் மனிதாபிமானம் உள்ள மனிதர்களை உருவாக்க வேண்டும். மொழிப்பற்று, சமூகப்பற்று, நாட்டுப்பற்று கொண்ட நற்பிரஜைகளை உருவாக்க வேண்டும். கா.பொ.த சாதாரண தரத்தில் நற் பெறு பேற்றைப் பெறும் மாணவர்கள் கா.பொ.த உயர்தரத்தில் சித்தியடையாது விடுகின்ற நிலை மாற வேண்டும். இப் பாடசாலையில் எந்தவொரு பற்றாக்குறையும் காணப்படாது புகழ் பெற்று காணப்பட வேண்டும்

**சிரேஸ்ட மாணவத்தலைவியாக**

தற்துணிவு, பொறுப்புனர்வு, விரைந்து தீர்மானம் எடுக்கும் திறன், கல்வி, இணைபாடவிதான செயற்பாடு, தலைமைத்துவப்பாங்கு,நேர முகாமை, அர்ப்பணிப்புக் கொண்டவராக சமூகத்தின் கற்றோர், பெரியோர், பெற்றோர் சொற்கேட்டு மதிப்பளித்து நடப்பவராக திகழ வேண்டும். சமூகத்தின் சீர்கேடான பழக்கவழக்கங்களை விடுத்து எனது பாடசாலை, எனது சகோதர சகோதரிகள், எனது ஆசிரியர், எனது அதிபர், எனது சமூகம் என்ற பற்றுறுதி இருக்க வேண்டும்.தன்னிடத்தில் தனக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். தன்னால் முடியும் என்ற இறுமார்ப்பு இருக்க வேண்டும் அப்போது தான் எண்ணம், சொல்,செயல் முன்மாதிரியாக இருக்கும்.

**என்னுடைய ஆசிரியர் மற்றும் அதிபர் அனுபவங்கள்.**

பாடசாலைக்கு வரும் எந்த குழந்தையும் சிறந்த குழந்தைகளே அவர்கள் ஒவ்வொருவருள்ளும் ஏதோ ஓர் திறமை மறைந்திருக்கும்.அவர்கள் சேருகின்ற நபர், குடும்பச்சூழல்,கைபேசி பாவனை, சமூகம் அவர்களை தவறான வழியில் திசை திருப்பி விடுகின்றன. இதனை உணர்ந்து பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கண்ணும் கருத்துடனும் கண்காணித்து சரியான பாதையில் வழிநடத்த வேண்டும். பாடசாலை அவர்களுக்கு சிறந்த வழிகளை காட்டும் நிறுவனமாக திகழ வேண்டும்.

நன்றி...



திருமதி சிவானந்தி பரதன்
அதிபர்,
கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

## நேரான தலைமைத்துவம் தலைநிமிர்க.

அடிமைகளின் சூரியன் ஆபிரகாம் லிங்கனை
அமெரிக்காவின் குடியரசின் தலைவனாக்கியது
அவரது தலைமைத்துவம் அன்றோ!

ஆயிரம் போரில் ஒருவனாகச் செல்வதை விட
ஆயிரம் பேருக்கு முன்னால் சென்று பார்
தலைமை எனும் ஆழ்கடலின் ஆழம் புரியும் அல்லவோ?

சுயநலம் கொண்ட தனிநபர் இடத்தில் காணப்படும் பண்பு அல்ல – மாறாக
பொதுநலம் கொண்ட தலைவனிடத்தில்
வேரூன்றிக் காணப்படும் கடமையே தலைமைத்துவம்

எத்தனை பேர் பின்தொடர்கிறார்கள் என்பதைவிட
எத்தனை தலைவர்கள் அவரால் உருவாகுகிறார்கள் என்பதே
தலைமைத்துவத்தின் வெளிப்பாடு

பழைய மரபுகள் அடியேடு அழிந்து விட
புதிய நெறிமுறைகள் கண்ணை மறைத்துக் கொள்ள
தலைமைத்துவம் சீரழிந்து நின்று புத்துயிர் பெற மறுப்பதேன்?

மாறுபட்ட யுகம் தனில் மீளத்துடிக்கும் தலைமுறைகள்
தலைமைத்துவம் யாதென அறியாமல்
தன்னிலை மறந்து நின்று
தன்னலம் கொள்ளும் அவலம் என்னவோ?

பிறர் பாராட்டும் அவரது பழிச்செல்லும்
சீரான தலைமையை சீண்டுவதில்லை
விவேகத்துடன் பயனிக்கும் தலைமைத்துவம்
தலைநிமிர ஒருபோதும் தவறுவதில்லை

பணம் ,பதவிக்கு அலைந்து திரிந்து
சீர்கேடுகள் மட்டுமே எஞ்சியது
தலைமைத்துவம் தவறுகையில்
இத் தரணியே கேள்வியானது

நீதி தேவதை கண் கொண்டு
நேர்மை வழியில் நடத்தி
நேரான பாதையில் திக்கெங்கும் பயணிக்க
சக மனிதராய் போராடும் தலைமையே வாழ்க!



ச.சுவேதன்.
உதவி சிரேஸ்ட மாணவத் தலைவன்,
கிளி/முழங்காவில மகாவித்தியாலயம்.

## தேமதுர தமிழோசை

தமிழ்மொழி மலர தமிழ்த்தாய் மகிழ
வானம் பாட வாய்மொழி தன்னை வளர்க்க
தேமதுர தமிலோசை தமிழ் மண்ணில் சிறகடிக்க
தமிழ்த்தாய் தன்னை தாரகையாய் உயர்த்தினாள்

பிறநாட்டு கலாசாரம் பலவழியில் நுழைய
பண்டைய தமிழ் சமூகம் தரை புரண்டு தன்னை மறக்க
ஆங்கில நாட்டம் அகிலம் கண்டு சிறக்க
ஆதரவு அற்று தமிழ்த்தாய் கண்ணீர் செரிந்தாள்

வீறுகொண்ட தமிழ் மகனே! வேங்கையென சீறிப்பாய்
தமிழ் வளரத்தொண்டாற்றி தாய்மொழி வளர்க்க பணிசெய்வாய்
உன்னைத் தத்தெடுத்த தாய்க்குப் பெருமை ஊட்ட
உலகையும் தாண்டி உன்னைதமாய் பணி செய்

முடியுடை மூவேந்தர் முச்சங்கம் அமைத்து வளர்த்த தமிழை
முன்னேற்றும் மைந்தனாய் தமிழோசை அறிவாய்
முதல் மொழியாம் தமிழ்மொழியை
முதற் கண்ணாய் கொண்டெழுவாய்

தன்னை மறந்து தமிழுக்கு தொண்டாற்ற
எழுந்திடு மானிடா!
தேமதுர தமிழேசை காண
தமிழுக்கு பணிந்திடு மானிடா!

காரிருளைக் கண்டு அச்சம் கொண்டாயோ?
கானகத்திடையே தத்தித் தவழ்ந்தாயோ?
அச்சத்தை ஆழம் தள்ளு
அறிவுடை மைந்தனாய் தமிழன் என்று பெயர் செல்லு

தமிழ்த்தாயே உம்மைப் போற்றி
தமிழனாய் நான் தலை நிமிர்வேன்
தலைமகனாய் உம்மை வாழ்த்தி
தமிழோசை நான் அறிவேன்

தமிழுக்காய் பாடுபட்ட வீரர்களைத் தொலைத்து
தமிழ்மொழியை நம் தாயாய் ஏற்க மறுத்து
தட்டிக்கொடுத்து கரம் தூக்கி விட
தலைவன் இல்லாது தரை புரண்டோமே!

பாவலரும் நாவலரும் புத்துணர்ச்சியைப்
பா வரியாக பாடி நிற்க அறிந்தேனோ!
பாமர வாழ்வில் பாதை மறந்த போதும்
பாவழகி தமிழ் அன்னையை மறக்க கூடுமோ!

தமிழைப் போல் வேறு மொழி இல்லை
தமிழை மேலும் செதுக்க ஒரு தச்சன் இல்லை
தமிழ் செல்லும் கதையைக் கேட்க பாரதி இல்லை
தமிழை மேலும் போற்றிப்பாட கம்பரும் இல்லை

தஞ்சைப் பெருங்கோயில் தமிழன் பெருமை கூறும்
நாளைய தலைமுறைகள் தமிழுக்கு தலை வணங்கும்
இன்றைய சமூகம் தமிழை ஆதரிக்க
நாளைய தலைமுறை தமிழை வரவேற்கும்

மொழி தந்த உன் பாதம் - அதில்
உயிர் மூச்சு இழப்பதே என் தானம்
உயிருக்கும் மேலான தாய்க்கும் நிகரான
தமிழ் அன்னையே வாழிய!



ஜெ.டிலக்சன்
மாணவத்தலைவர்,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

## மாணவத்தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட பாடசாலைச்சிரமாதானம்.













# பாடசாலைகளில் ஒழுக்க விழுமியக்கல்வி.

சமூகத்தின் பெறுமதி மிக்க நிறுவனங்களாக பாடசாலைகள் விளங்குகின்றன. தனி மனித மாற்றம் ஊடாக பாரிய சமூக மாற்றத்தை வெகு விரைவாக ஏற்படுத்தும் இயங்கு நிலை சார் நிறுவனமாக பாடசாலைகள் திகழ்கின்றன. கல்வி அறிவை வழங்குதல் என்பதற்கு அப்பால் 'சம ஆளுமை' (balance personality) கொண்ட மாணவ சமூகத்தை உருவாக்குதல் என்ற தூர நோக்கினை நோக்கி பயணிக்கும் இந் நிறுவனங்களின் அடிப்படை போதனையாக 'ஒழுக்க விழுமியக்கல்வி' அமைகின்றது.

## பாடசாலை செயற்பாடுகளில் ஒழுக்கம்.

பாடசாலைகள் வெவ்வேறு கலாசார சமூக அமைப்பைக்கொண்ட சமூகச்சூழலில் இயங்குகின்றன. இத்தகைய மாறுபட்ட சமூகச்சூழல், சிக்கலான சமூகச்சூழல் ஆகியவற்றின் பிரதிநிதிகளாக மாணவர்கள் விளங்குகின்றனர். இந்நிலையில் மாணவர்களின் ஒழுக்க விழுமியம் சார் செயற்பாடுகளை சமூக கலாசார சூழலுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி வழங்க வேண்டிய பாரிய பொறுப்பு பாடசாலைகளுக்கு உண்டு. இதனாலேயே பாடசாலைகளில் ஒழுக்கம் பேணுதல் தொடர்பாக கல்வி அமைச்சின் 2005.17 , 2016.12 ஆகிய இலக்க சுற்றறிக்கைகள் காணப்படுகின்றன.

பாடசாலை செயற்பாடுகள் 3 நிலைகளில் வடிவமைக்கப்பட்டள்ளன.

- பாடக்கலைத்திட்டம்
- இணைகலைத்திட்டம்
- மறைக்கலைத்திட்டம்

கலைத்திட்டங்கள் அனைத்தினதும் அடிநாதம் ஆக 'ஒழுக்க விழுமியக்கல்வி' விளங்குகின்றது. பாடத்துறை சார் போதனைகள் ஒழுக்க விழுமியங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் எடுத்தியம்புகின்றன. கலைத்துறை பாடங்கள் நேரடியாகவும் அறிவியல் பாடங்கள் குறிப்புப்பொருளாய் எடுத்தியம்புகின்றன.

இணைக்கலைத்திட்டம் என்ற வகையில் பாடத்துறைக்கு அப்பால் விளையாட்டுக்கள், மன்ற செயற்பாடுகள் அழகியல் வெளிப்பாடுகள் என்பவற்றின் ஊடாகவும் மாணவர்களுக்கு அவசியமான ஒழுக்க விழுமியங்கள் போதிக்கப்படுகின்றன. இவை தொடர்பான விதிகள், சட்டதிட்டங்கள், பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் என்பன நாளாந்த செயற்பாடாக பாடசாலைகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

மறைக்கலைத்திட்டம் என்பது ஒழுக்க விழுமியக்கல்வியில் பாரிய பங்காற்றி வருகின்றன நாளாந்த, வாராந்த, மாதாந்த செயற்பாடகளாக இவை மாணவர்களுக்கு ஊட்டப்படுகின்றன. காலைபிரார்த்தனை, சமய விழாக்கள், சொற்பொழிவுகள், குருபூசைத்தினங்கள், ஆலய பராமரிப்பு என இவை

பாடசாலைக்கு பாடசாலை பரந்து விரிந்து செயற்படுவதை காணலாம். திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட கலைத்திட்ட செயற்பாடுகள் 13ஆண்டு கல்வித்திட்டத்தில் மாணவரிடத்தில் ஒழுக்கவிழுமிய முதிர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதே பாடசாலைகளின் பிரதான தூர நோக்காகும்.

## ஒழுக்க விழுமியக்கல்வியின் தேவைப்பாடும் நியாயப்பாடும்.

சவால்கள் சிக்கற்பாடுகள் நிறைந்த இன்றைய இயந்திரமயமான சமூக வாழ்க்கைச்சூழலில் 'ஒழுக்கவிழுமியக்கல்வி' என்பது மாணவர்களுக்கு மிக மிக அவசியமானதொன்றாக விளங்குகிறது. சிறுவர் துஸ்பிரயோகங்கள், விலகல் நடத்தைகள், உடல்ரீதியாக தண்டனைகள், ஆசிரியர்-மாணவ உறவுகள் விரிசல் மாணவர்களிடம் ஏற்படுத்தப்படும் அழுத்தங்கள், எதிர்மறை எண்ணப்பாங்குகள் போன்றவற்றின் அதிகரிப்பு ஒழுக்க விழுமியக்கல்வியின் அவசியத்தை மேலும் வலுப்படுத்துவதைக்காணலாம். ஒழுக்க விழுமிய செயற்பாடுகளை சீரமைக்கும் வகையில் பாடசாலைகள் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

- ஒழுக்காற்று குழுவின் தோற்றம்
- இணைபாடவிதான செயற்பாடுகளை சிறப்பான விதத்தில் ஒழுங்கமைத்தல்.
- மறைக்கலைத்திட்ட செயற்பாடுகளை இற்றைப்படுத்தல்.
- உடல் ரீதியான தண்டணைகளை குறைத்தல்.
- ஒழுக்கநெறி தொடர்பான விழிப்புணர்வு தினமும் வழங்கப்படல்.
- ஆலோசனை வழிகாட்டல் சேவையை வலுப்படுத்தல்.
- ஆசிரிய-மாணவ உறவுகளை வலுவுள்ளதாக்கல்.

## பாடசாலை – ஒழுக்காற்றுக்குழு.

பாடசாலைகளில் காணப்படும் ஒழுக்காற்றுக்குழு பல்வேறு பணிகளை ஆற்றிவருகின்றது.

- ஒழுக்க விழுமிய செயற்பாடுகளை கண்காணித்தல்.
- ஒழுக்கத்தை ஊக்குவிக்கும் காரியங்களை நடைமுறைப்படுத்தல்.
- ஒழுக்க விழுமியம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- பொருத்தமற்ற நடத்தை தொடர்பான முறைப்பாடு கிடைத்தால் கூட்டம் கூட்டுதல்.
- முறைப்பாடு தொடர்பில் விசாரனை நடத்துதல்.
- தகவல்கள் சரியாக பேணப்படல்.
- சுற்று நிருபங்கள், சட்டதிட்டங்களுக்கு அமைவாக தீர்மானம் மேற்கொள்ளல்.
- குழுதொடர்பான அறிக்கை, கோப்பு என்பவற்றை பேணிவருதல்.

**ஒழுக்கத்திற்கு மாறான செயற்பாடுகளின் மாணவர்கள் ஈடுபடும் பட்சத்தில்.**

- உரிய தவறு தொடர்பாக மாணவனுக்கு சுட்டிக்காட்டல்.
- பெற்றோர், பாதுகாவலர்களை அழைத்து விளங்க வைத்து அறிவுறுத்தல்.
- ஒழுக்காற்று குழுவின் தீர்மானத்துடன் மாணவரின் சிறப்புரிமைகளை இடைநிறுத்துதல். (வகுப்பு முதல்வர், மாணவ முதல்வர், கழக தலைமைத்துவங்கள், விளையாட்டு சந்தர்ப்பங்கள்)
- பாடசாலை மாற்றம் என்பன உரிய வகையில் சுற்று நிருபத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவர் பாதுகாப்பில் கௌரவத்தில் பெற்றோருக்கு சமமான பொறுப்பு ஆசிரியருக்கு உண்டு. இந்நிலையில் மாணவரிடத்தில் நற்குணாதிசயங்களை கட்டிஎழுப்ப புரிதல், வழிகாட்டல் மற்றும் நேர்வலுவூட்டல் மூலம் நல்ஒழுக்க சீலர்களாக மாணவர்களை உருவாக்கும் பொறுப்பு வாய்ந்த பணியை பாடசாலைகளில் சேவை புரியும் பங்கு தாரர்களுக்கும் உண்டு.

“காலத்தின் தேவை உணர்ந்து கருமமாற்றும் பாடசாலைகள் சரியான பொறுப்புடன் செயலாற்றின் சட்டங்கள் மூலம் தடுக்க முடியாதவை கூட தடுக்கப்பட்டு சட்டத்தின் தேவையற்ற ‘நற்சமூகம்’ இவ்வுலகில் வேரூன்றும் என்பது திண்ணம்.”

❖ “மனிதன் யாருமே தவறு செய்வதில்லை தவறுசெய்யக்காரணம் அவன் சரி பிழை பற்றி அறிந்திராமையே காரணம்” என்று கூறுகிறார் ஒழுக்கவியலின் தந்தை “சோக்கிரட்டீஸ்” இதற்கமைய ஒழுக்க விழுமியத்தை போதிக்கும் பாரிய பணி பாடசாலைகளுக்கு உண்டு.

நன்றி



திருமதி. பிரேமலா தங்கரூபன்.
உபஅதிபர்,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

## அப்துல் கலாம்

திரு ஏபிஜே அப்துல் கலாம் அவர்கள் இந்தியாவின் தமிழ்நாட்டிலே இருக்கின்ற ராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரத்தில் பிறந்தார். ”இளைஞர்களை கனவு காணுங்கள், இந்திய எதிர்காலம் உங்கள் கைகளில் தான் உள்ளது” என்கின்ற வரியை இளைஞர்களுக்கு வழங்கி மறைந்த அப்துல்கலாம் அவர்கள் ஒரு இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்தவர் ஆவார். இவர் இந்திய நாட்டின் முன்னாள் ஜனாதிபதியும் ஏவுகணை தொழிற்ப விஞ்ஞானியும் ஆவார்.

இவர் ஜைனுலாப்தீன்,ஆயிஷாமா தம்பதியினருக்கு மகனாக 1931 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் திகதி அவதரித்தார். இவர் நான்கு சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரியுடன் வளர்ந்தார். இவரின் தந்தையார் ராமேஸ்வரத்துக்கு வருகின்ற பக்தர்களை தனுஷ்கோடி என்ற இடத்திற்கு தனது சொந்த படகில் அழைத்துவரும் தொழில் செய்து வந்தார். இவரது குடும்பம் பூர்வீகத்தில் மிகவும் செல்வந்த குடும்பமாக இருந்தாலும் பின்னர் ஒரு வறுமை நிலையை அடைந்த குடும்பமாக காணப்பட்டது. அப்துல் கலாம் அவர்கள் தனது குடும்பத்தின் வறுமையை போக்க தனது பள்ளி நேரத்திற்கு பின்பு செய்தித்தாள்கள விற்பனை செய்து வருமானம் ஈட்டி வந்தார். இவர் தனது பள்ளிப்படிப்பை முடித்து திருச்சி மாவட்டத்தில் உள்ள செயின்ட ஜோசப் கல்லூரியில் இயற்பியல் துறையை கேட்டு 1954 ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். அப்துல் கலாம் அவர்களுக்கு இயற்பியலில் ஆர்வம் இல்லாமையால் போர் விமானியாகும் தனது சிறுவயது கனவை அடைய முயற்சி மேற்கொண்டார். எனினும் போர் விமானி ஆவதற்கான தேர்வில் மதிப்பெண்கள் குறைவாக எடுத்த காரணத்தால் அவரின் கனவு நிறைவேறவில்லை பின்னர் 1955 ஆம் ஆண்டு குரோம் பேட்டையில் எம் ஐ டி தொழில் கல்வி நிறுவனத்தில் ”விண்வெளி பொறியியல்” படித்து முடித்து அதே கல்லூரியில் முதுகலை பட்டத்தையும் பெற்றார்.

1960 ஆம் ஆண்டு மத்திய அரசின் கீழ் இயங்கும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி நிறுவனத்தில் விஞ்ஞானியாக பணியில் சேர்ந்து அங்கு ”ஹோவர் கிராப்ட்” எனப்படும் நிலம், நீரில் செல்லக்கூடிய வாகனத்தை உருவாக்கினார். பின்னர் இந்தியாவின் புகழ் பெற்ற விண்வெளி அறிவியலாளர் ஆன திரு. விக்ரம் சாராபாய் அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் தலைமையின் கீழ் அப்துல் கலாம் அவர்கள் பணிபுரிந்தார்.

திரு அப்துல் கலாம் அவர்கள் 1963 ஆம் ஆண்டு முதல் 1964 வரை அமெரிக்கா விண்வெளி ஆகு நிறுவனமான நாசாவின் தலைமையகம் மற்றும் ஏனைய ஆய்வு தளங்களை பார்வையிட்டு இந்தியாவில் விண்வெளி ஆய்வுகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை வகுத்தார்.

1998 ஆம் ஆண்டு அப்துல் கலாம் அவர்களின் தலைமையில் மே மாதம் 11ஆம் திகதி ராஜஸ்தான் மாநிலத்தில் ”பொக்ரான்” எனும் இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அணுகுண்டு சோதனை அவரின் சாதனைகளின் மகுடமாக கருதப்பட்டது. 1997 ஆம் ஆண்டு மத்திய அரசு இவருடைய விண்வெளி ஆய்வு, தேசிய பாதுகாப்பு மற்றும் ஏவுகணை தொழில்நுட்பத்தில் இவர் ஆற்றிய பணிக்காக ”பாரத ரத்னா” விருது வழங்கி அவரை கௌரவித்தது. இந்தியாவின்

பாதுகாப்பிற்காக இவரின் தலைமையில் கீழ் இயங்கிய விஞ்ஞானிகளால் "அக்னி" மற்றும் "பிரித்திவி"ரக ஏவுகணைகள் உருவாக்கப்பட்ட காரணத்தால் அப்துல் கலாமுக்கு "ஏவுகணை நாயகன்"என்கின்ற ஒரு பட்டப் பெயர் வழங்கப்பட்டது.

அரசியலில் பெரியளவு ஈடுபாடு இல்லாத கலாம் அவர்கள் அப்போதைய பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 2002 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று 2002 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக பதவி வகுத்தார்.

சிறந்த புத்தக வாசிப்பாளரான அப்துல் கலாம் இளைஞர்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் பல்வேறு புத்தகங்களையும் எழுதினார். இந்தியா 2020, எழுச்சி தீபங்கள், அப்புறம் பிறந்தது ஒரு புதிய குழந்தை, என்னுடைய பயணம் போன்ற பல புத்தகங்களை இவர் எழுதிய போதும் இவரின் புகழை எப்போதும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் புத்தகமாக திகழ்வது இவர் எழுதிய "அக்னி சிறகுகள்" எனும் புத்தகமே ஆகும்.

2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி மேகாலயா தலைநகர் ஷில்லாங்கில் மத்திய அரசின் இந்திய நிர்வாக கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்த சிறிது நேரத்தில் உடல் நலக்குறைவால் மேடையிலேயே நிலை தடுமாறி விழுந்தார். அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்று சில மணி நேரத்தில் திரு. அப்துல்கலாம் அவர்கள் காலமானார். ஜூலை மாதம் 30 ஆம் திகதி அவரது சொந்த ஊரான ராமேஸ்வரத்தில் இருக்கின்ற பேய் கரும்பு எனும் இடத்தில் முழு அரசு மரியாதையுடன் இஸ்லாமிய வழி சம்பிரதாயத்தின் படி அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

சிறுவயதிலிருந்தே எதையும் கற்றுக் கொள்ளும் ஆர்வம் மிகுந்தவராகவும் எப்போதும் எளிமையாக இருப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். இறுதி வரைக்கும் பிரம்மச்சாரி ஆக வாழ்ந்த ஏ பி ஜே அப்துல் கலாம்"எதிர்கால இந்தியா இளைஞர்கள் கையில் "என்றும் "கனவு காணுங்கள்! அந்தக் கனவை நினைவாக்க பாடுபடுங்கள்" எனும் பாக்கியத்தை இளைஞர்கள் மத்தியில் வேரூன்ற செய்தவர்.

உலகம் போற்றும் விஞ்ஞானியான கலாம் தன்னுடைய பொன்மொழிகளாலும், கவிதைகளாலும், வாசகங்களாலும் அனைவரின் மனதிலும் நீங்காவிடம் பிடித்துள்ளார்.

சி.தர்மீகன்.
மாணவத் தலைவன்,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.



## Important of English knowledge in today's world

English not just a language it's a global passport to communication opportunity and advancement its importance cannot be overstated firstly, English is the lingua franca of the world spoken by millions as either a first or second language. it facilities communication between people of different cultures, enabling trade, diploma and collaboration in various fields like science, technology and business.

Secondly,proficiency in English opens doors to a wealth to knowledge. most academy resources, from research paper to online courses are in English. being fluent in English allow individuals to access and contribute to this vast pool of information, enhancing their education and career prospects .

Moreover, English proficiency is often a prerequisite for employment in multinational companies and international organisations. in today's interconnected world. employees see candidates who can communicate effectively across boreders and cultures. furthermore, English is the language of the interne. The majority of websites, social media platforms ,and digital content are in English, providing to a global audience and fostering connectivity and collaboration on a scale never seen before.

In essence, mastering English is not just about learning a language. it's about unlocking a world of opportunities, briding culture cultures divides and achieving personal and professional growth.

Thank you



Mahenthiran kamsa.
Prefect,
Kn/Mulankavil Maha vidyalayam.

## ஆங்கில மொழியின் முக்கியத்துவம்.

நாற்றிசையும் புகழ்பாட
நாகரிகம் வளர்ச்சிகாண
நாளாந்தம் ஆங்கிலம் பேசி -இனிவரும்
நாட்களுக்கு அடித்தளம் விடுவோம்

அகிலம் தன்னை ஆட்சி செய்து
ஆதிக்கத்தில் உயர்ந்து நிற்கும்
ஆங்கில மொழியில் - உனக்கு
நிகர் வேறுண்டோ?
என்னை நான் அறிய
உலகில் நான் மகிழவேண்டும்
உலகு என்னை காண
உன்னில் நான் உயர வேண்டும்

அறிவியலிலும் ஆங்கிலம் தான்
அகிலத்திலும் ஆங்கிலம்தான்
நாளாந்தம் நாலு சொற்கள்
அனைத்துமே ஆங்கிலம் தான்

இன்று என்ன?
நாளை என்ன ?
என்றுமே ஒன்றுதான்
ஆங்கிலம் மட்டும் தான்

உலகில் உயர்ந்தவள்

ஆங்கில அண்ணை என்றால் மிகையாகுமோ?

அனைத்துமே அவள் பெயரில் என

வார்த்தை தான் போதுமா!

ஆங்கிலமும் அறிவியலும் உயர்ந்து நிற்க

அனைத்துக்கும் ஆங்கிலம் முதன்மை பெற

அதிகமானோர் உச்சரிக்கும் மொழியே

உன்னை அறிய நான் யாது செய்வேன்

இனம், மதம், மொழி என பிரிந்து நின்றாலும்

ஆங்கிலம் ஒன்றுபட

அனைத்தையும் இணைப்பது நீ அன்றோ?

உனக்கு மிகை உண்டோ?

பேசிப் பேசிப் பார்த்தால்

அது வெறும் மொழி

தொடர்ந்து உரைத்தால்

ஆகவே வெற்றியின் வழி

நன்றி



பு.ஜெனோஷா.
மாணவத்தலைவி,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

## இலக்கியங்களில் பெண்கள் ....

இலக்கு என்பது நோக்கம் என்று குறிக்கோள் என்றும் பொருள்படும் இயம் என்பது கூறுதல் அல்லது மொழிதல் என்று பொருள் கொள்ளப்படும். அந்த வகையில் இலக்கியம் என்பது பிரதான நோக்கத்தினையும் அதன் துணைக் கூறுகளையும் எடுத்தியம்புவதாகும். இவ்வாறான இலக்கியங்கள் இன்றைய காலகட்டத்தில் சமூகத்துடன் இணைந்து செல்கின்றனவா? என்ற கேள்விக்கு ஐயம் இல்லாமல் பதில் கூற முடியாது ஏனெனில் இலக்கியம் சமூகத்தில் இருந்தாலும் சமூகத்தவர்களிலிருந்து வெகு தொலை தூரத்திலேயே இன்றைய இலக்கியங்கள் கற்பாரின்றிக் காத்திருக்கின்றன. இலக்கியங்கள் பொன் போன்றவை கிடைப்பதற்கு அரிய பொக்கிஷப் புதையல்களாகவே நல்ல இலக்கியங்கள் காணப்படுகின்றன.

இலக்கியங்கள் எனும் அருங்கொடைப் புதையல்கள் பெண்ணியம் பற்றிய சான்றுகளை சாதாரண வாழ்விற்குத் தேவையான வழிமுறைகளை ஆராய்ந்து தெள்ளத்தெளிவாக எடுத்துக் கூறுகின்றன.

சங்க காலத்திலேயே தோற்றம் பெற்ற எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்களாக இருந்தாலும் இன்றைய நவீன காலத்திலேயே தோற்றம் பெற்ற இலக்கியங்களாக இருந்தாலும் பெண்ணின் வாழ்வை பிரதிபலித்து பெண்மைக்கு இன்றியமையாத இடத்தை அடித்தளமாக இட்டு உலகளாவிய ரீதியில் நகர்ந்து செல்கின்றது.

சங்ககாலத்திலே பேதை,மங்கை, மடந்தை, அரிவை,தெரிவை, பெதும்பை,பேரிளம்பெண் என பெண்ணின் ஏழு பருவங்கள் பற்றி எடுத்துக் கூறுகின்றது. திருவள்ளுவர் “உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு” என தன் கருத்தை சமூகத்திலே விதைத்து பெண் சமூகம் அக்காலத்திலேயும் இலக்கியங்களில் இடம் பிடித்துள்ளதற்கு சான்று நகர்ந்து சென்றுள்ளார்.

இவை தவிர சங்கமருவிய காலத்திலும் இலக்கிய கர்த்தாக்கள் பெண்களை பாட்டுடைத் தலைவர்களா கொண்டு இலக்கியங்களை படைத்துள்ளனர். அந்த வகையில் சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளது எடுத்துக்காட்டாக நோக்கலாம்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி,மாதவி,பாண்டிமாதேவி ஆகிய பெண்களின் வாழ்க்கை வரலாற்றை படம் பிடித்து இளங்கோவடிகளார் படைத்துள்ளார். மாதவியின் மகளான மணிமேகலை இனி பாட்டுடைத் தலைவியாக கொண்டு சீத்தலைச்சாத்தனார் மணிமேகலை இலக்கியத்தை படைத்து பெண்கள் உலக இலக்கியங்கள் மட்டில் இன்றியமையாத இடம் பிடித்ததை எடுத்துக்காட்டி சென்றுள்ளார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் மட்டுமின்றி உலகம் போற்றும் கிரேக்க நாகரிக பொற்காலத்திலும் பெண்கள் இலக்கியத்தில் அதிக பாங்கினை பெற்றுள்ளனர் எடுத்துக்காட்டாக சப்போ எனும் கிரேக்க பெண் கவிதையாளர் கோடைகால இன்பம் வசந்த கால வனப்பு என்ற கவிதையை படைத்து இலக்கிய துறைக்கு வித்திட்டுச் சென்றுள்ளார்.

இலக்கியத் துறை மட்டுமின்றி பெண்களின் சாதனைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறையிலும் அங்கம் வகித்துச் சென்றுள்ளது நாடுகான் பயணம் முதல் விண்வெளி பயணம் வரை ஏதோ ஒரு வழியில் பெண்ணானவள் சாதித்து தன் வரலாற்றை உலகம் அறிய இலக்கியத்தில் இடம் பிடித்துள்ளார்.

இன்றைய இலக்கியத்துறை உட்பட தென்மையான இதிகாச இலக்கியங்களும் மகள் மகளிரை இந்த வையம் உள்ளவரை போற்றும்படி செய்துள்ளனர் ராமாயணம் என்ற இலக்கியப் படைப்புகளில் போர்களை தூண்டியது பெண்களே எனை உலகம் மானிடர் கருத்து கூறுவது உண்டு. ஆனால் இக்கூற்றின் பொருட்டு இதிகாசங்களை நன்கு ஆராய்ந்தால் பெண்ணை இழிவு படுத்தி அவளது சுதந்திரம் பற்றியும் கற்பு பற்றியும் அவளைத்துன்பத்துக்குள் மூழ்கடித்து கரைவந்து சேர முடியாமல் அவளை இழிவாகநடத்தி அவமதித்தமையுமே அப்போர்களுக்கு காரணம் எனலாம், குறிப்பாக கூற முற்பட்டால் பெண் அப்போருக்கு காரணம் அல்ல பெண்ணை இழிவு படுத்தியமையே அப்போர்களுக்கு காரணம் என சான்று பகிர்கின்ற அதிகாச இலக்கியங்கள்.

இலக்கியங்கள் பெண்ணையும் அவளது பெருமையையும் போற்றி இக்கால பெண் வர்க்கத்திற்கு அடித்தளமாக அமைகின்ற இலக்கிய பெண்கள் இலட்சியவாதிகளாவர். இலட்சியவாதிகள் அழிந்தாலும் அவர்களது இலட்சியம் அழிவதில்லை எனவே இலக்கியப் பெண்கள் போற்றப் பெறுக! வையகம் உள்ளவரை வாழ்வோர் அனைவரும் பெண்களை வாழ்த்தி நிற்க வேண்டும்.

வையகமே நீ சோர்வு கொள்ளாதே உன் இலக்கியப் பெண்கள் உன்னை இன்று வரை வாழ வைத்து உன் எதிர்கால சந்ததிக்கு வழி சேர்த்து நாளைய வரலாறு படைக்க வீறுகொண்ட மகளிரை எதிர் பார்த்து கரம் கொடுக்க இலக்கியங்கள் என்றுவரை சான்று பகர்கின்றன நாளைய சமுதாயம் இலக்கியப் பெண்களின் வரலாற்றை போற்றும் நாளைய சமூகம் இலக்கியப் பாதையை காவல் காக்கும் இலக்கியமே உன் பணி ஓங்க மகளிரின் கனவுகள் சிறகடித்து இலக்கியத்தில் இடம் பிடித்த நிற்க துறைகள் யாவும் வளர்ந்திடுமே.

நன்றி



து.கிந்துஜா.
மாணவி,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

## ஆப்ரகாம் லிங்கன் அவர்களின் எதிர்பார்ப்பு

### "ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் அவர்கள் தன் மகனின் முதல் ஆசிரியருக்கு வரைந்த மடலின் கருத்துக்கள்"

முதல் ஆசிரியர் அவர்களே! அனைத்து மக்களும் உண்மையின் பக்கம் இல்லையென்பதை என் மகனுக்கு கற்பியுங்கள் கயவர்களிலும் நற்குணம் படைத்த வீரர்களும் இவ்வுலகில் வசிப்பதாக அனைத்து எதிரிகளிளும் ஓர் நண்பரும் இருப்பதை அவனுக்கு கற்பியுங்கள். அதே போன்று இலவசமாக எவரிடமிருந்தேனும் கிடைக்கும் ஐந்து டொலரினை விட தனது சிரம உழைப்பினால் கிடைக்கும் ஒரு டொலரின் பெறுமதி அதிகமென்பதை அறிவூட்டுவீராக அதனை அவன் புரிந்துகொள்வதற்கு காலமெடுக்கும் என்பதை நானறிவேன் எனினும் உண்மையை உரையுங்கள்.

தோல்வியை சகித்துக்கொள்வதற்கும் வெற்றியை தற்செருக்கின்றி மனமகிழ்ச்சியுடன் அனுபவிப்பதற்கும் என் புதல்வருக்கு கற்பியுங்கள் சில பேர் பொறாமையுடன் அவனை தாழ்வு பெறச்செய்ய அப்பாற்படுத்தத் துணியும் போது அவற்றினால் மனம் தளராது அமைதியாயிருந்து அடிமனதினால் சிரிக்குமாற்றல் தரும் சக்தியின் அந்தரங்கத்தையும் அவனுக்கு கற்பியுங்கள் தனது உடற்பலத்தினால் மக்களை ஐயமூட்ட வருபவர்கள் தோற்கடிக்க இலகுவானவர்களென்பதையும் அவனுக்கு தெளிவுபடுத்துங்கள்.

முதல் ஆசிரியர் அவர்களே உங்களால் முடியுமாயின் நூல்களது மகிமையை அவனுக்கு கற்பியுங்கள் அது மட்டுமல்ல வானில் சஞ்சரிக்கும் குருவிகள் பறந்து செல்லும் தேனீக்கள்....நீல வர்ண மலைச்சாரலில் மலர்ந்து அசைந்தாடும் தாரகை மலர்கள் கூறி நிற்கும் அறியப்படா இரகசியத்தை அவனுக்கு ஆறி அமர்ந்து சிந்திக்க இடமளியுங்கள் தன்னைச்சூழவிருப்போர் செய்பவற்றை கண்மூடித்தனமாக பின்பற்றாமல் தனது மதியால் தேவையானவற்றையும் தெளிவு பெற்று அனைவருக்கும் செவி தாழ்த்த அவனை கற்பியுங்கள்.

தனது உடலின் உள்ளத்தின் சக்தியை அதியுயர் பெறுமதிக்கு கேட்போருக்கு விற்பினும் தனது இதயத்திற்கு ஒருபோதும் விலைபேசாது காதடைத்து நிற்க அவனைக் கற்பியுங்கள் பொய்க்கோசமெழுப்பும் சனத்திரனிடையே காதுமூடி நிற்பதற்கு அவனுக்கு தைரிய மூட்டுங்கள் தான் சத்சியமாக ஏற்றுக்கொள்வதைப்பற்றி தைரியத்துடன் போராடவும் அவனுக்கு கற்பியுங்கள்.

-முதல் ஆசிரியர்களே அவனை மென்மையாக கையாளுங்கள்-

**“பெற்றோரினால் தனது பிள்ளைகளுக்கும் குறைவில்லா˙ செல்வம் கற்றோர் சபை நடுவே முன்னோக்கி நிற்கவேண்டிய அறிவாற்றலாகும்”.**

நன்றி



ந.சனோபா.
மாணவத்தலைவி,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

## தன்னம்பிக்கை

எவ் வேளையிலும் மேகம் போர்வை போத்தினாலும்
வெளியில் வரும் சந்திரன் - அது போலதான்
உன் வெற்றியை யார் தடுத்தாலும் உனக்குள் இருக்கும்
தன்னம்பிக்கை உன்னை உயரத்தில் கொண்டு செல்லும்.

விதைகள் மண்ணில் புதைத்தால் தான் விருட்சங்கள்
மேல் நோக்கி வளரும் அதனால் விதை என விழு
எழும் போதுவிருட்சமாய் எழு

நாளைய பொழுதில் எல்லாம் மாறிவிடும்
என்பது நம்பிக்கை எதுவும் மாறவில்லை என்றால்
சமாளிக்க முடியும் என்பது தான்
தன்னம்பிக்கை.

தடை இருந்தால் பாதையை திரும்பிச்செல்
பயணத்தை நிறுத்தாதே
ஓடும் நதி போல் பாதையை உருவாக்கி
ஓடிக்கொண்டே இரு.

தனியாக உயரப்பறக்கும் பறவைக்கு
இருக்கும் நம்பிக்கை - உன்மீது
உனக்கு இருந்தால் - நீயும்
உயரலாம் இந்த பூமியை ஆளலாம்

உனக்கு முன்னால் செல்பவனை பார்த்து ஏங்காதே
தாழ்வு மனப்பான்மை வரும் - உனக்கு கீழே
உள்பவனை ஏளனமாய் பார்க்காதே
தலைக்கனம் வந்துவிடும்.

தோல்விகளை கண்டு அஞ்சாதே
ஓடிக்கொண்டே இரு ஓடும் போது - நிமிர்ந்துபார்
உன் கைக்கு எட்டும் துாரத்தில் தான் - வெற்றியும்
பிடித்து விடலாம் ஜெயித்துவிடலாம் ஓடிக்கொண்டிருக்கும்
முயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால்



பி.விதுசாயினி.
சிரேஸ்ட மாணவத்தலைவி,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

## ஆளுமையை வளர்ப்பதில் மென் திறன்களின் பங்கு.

கல்வியின் நோக்கங்களில் ஒன்று மனிதவலு விருத்திக்கும் அதன் பண்பாட்டிற்கும் தேவையான அடிப்படைத்திறன்களை வருத்தி செய்தலாகும். இதனாலேயே இலங்கையின் தேசியகல்விக்குறிக்கோள்களில் ஒன்றாக வேலை உலகிற்கு தயார் செய்வதற்கான இலக்கு வலியுறுத்தப்படுகிறது. இதன் மூலம் பாடசாலைகள் தமது அயலிலுள்ள தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட வேண்டுமென்பது குறிப்பிடப்படுகின்றது. தொழிற் திறன் தொடர்பாக பாடசாலைப்பிள்ளைகளை முன்னேற்ற வேண்டுமென்ற கருத்து ஒரு தேசிய செயற்பாடாகி வருவது குறிப்பிடத்தக்கது.

இன்றைய சூழலில் உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல் போன்ற புதிய போக்குகள் முனைப்புப் பெற்று வருகின்ற நிலையில் ஒரு நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்புக்கும் கல்விக்கும் இடையே சிறப்பான தொடர்பு காணப்படுதல் அவசியமாகும். ஏனெனில் கல்வித் தொகுதியின் ஊடாகக் கிடைக்கப்பெறும் பொருத்தமான மனித அறிவு வளத்தை தேசிய சர்வதேச ரீதியில் தொழில் உலகுடன் போட்டி போடக் கூடியதாக மாற்றியமைத்தல் அவசியமாக உள்ளது.

இந்த நிலையில் மென்திறன்களின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. மென்திறன் என்பது பாட அல்லது கல்வியறிவு என்பதற்கு அப்பால் ஒரு வேலைக்களத்தில் செயற்படுத்துவதற்குத் தேவையான தொழில்சார் திறன்களும் ஆற்றல்களும் ஆகும்.

ஒரு நபரின் ஆளுமையைப் பிரதிபலிக்கும் குணாதிசயங்களுக்கான தலைமைப் பண்பு, ஒரு விடயமொன்றினை பொறுப்பேற்கும் பண்பு, மொழி ஆளுமை, சமூக நல்லிணக்கம், பேச்சுத்திறன் போன்ற மனித வளத்திறன்களின் பிரயோகத்திலும் மென்திறன் செல்வாக்கு செலுத்துகின்றது.மென் திறன் என்பது மனவெழுச்சி சார் நுண்மதி அதாவது உணர்வு சார் நுண்மதி, எனும் எண்ணக்கரு தோற்றம் பெற்றதன் பின் உருவாகிய ஓர் எண்ணக்கருவாகும். மாணவர்களிடம் மென் திறன்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்பது தொடர்பாக கல்வி புலத்தில் கல்வியாளர்கள் நீண்டகாலமாக கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

மென்திறனில் மிக முக்கிய பகுதியாக உள்ளது தொடர்பாடல் ஆகும். நாம் ஒருவருடன் தொடர்புகளை மேற்கொள்ளும் போது பேசுபவர்களுக்கும், கேட்பவர்களிற்கும் ஒரு உறவை உண்டாக்குகிறது. அதாவது நமக்கும் நம் குடும்பத்திற்கும் இடையே, மாணவர் ஆசிரியருக்கு இடையே, அலுவலகத்தில் பணிபுரிகின்றவர்களுக்கு இடையே என்று பல்வேறு விதமாக இத் தொடர்பு உள்ளூர், வெளியூர் என்று விரிவடைகின்றது. எனவே மென்திறனில் தொடர்பாடல் என்பது அன்பு, கட்டளை, வேண்டுகோள், அதிகாரம், பொறுப்பு, பொறுமை என்று பலவித உணர்வுகளை வெளிப்படுகின்றது. தன்னுடைய தேவைகளை மற்றவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள ஒவ்வொருவருக்கும் உதவும் ஒரு பெரிய சாதனமாக தொடர்பாடல் உள்ளது.

மாணவர்களின் மென்திறன்கள் விருத்தி அடையவேண்டுமாயின் மாணவர்களின் முறைசார் கல்வி, முறைசாரா கல்வி, முறையில் கல்வி, போன்றவற்றை பாடசாலை மட்டத்தில் பூரணமாக பெற்றுக்கொள்ள வேண்டும். மாணவர்களிடம் சமூகத்திறன்கள், சுயதிறன்கள், சிந்தனைத்திறன்கள் என்பன வளர்த்தெடுக்கப்படுவதன் மூலம் மென்திறன்களை விருத்தியடையச்செய்ய முடியும். ஆனால் பொதுவாக பரீட்சையை மையமாககொண்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடே அதிகமாக இடம்பெறுகின்றது. இதனால் மென்திறன் விருத்தி செயற்பாடுகள் வினைத்திறன் அற்றநிலையில் காணப்படுகிறன.

- **மென்திறன்கள் பின்வரும் விடயங்களில் செல்வாக்குச்செலுத்துகின்றன.**
    - குழுவாக பணியாற்றும் போது எளிதாக நட்பு கொள்ளும் திறன்
    - குழுவில் இணைந்து செயல்படும் குழு உணர்வு.
    - பிறர் மனதை கவரும் முறையில் வெளிப்படுத்திக்கொள்ளும் திறன்.
    - எளிமையான, தீர்க்கமான உடல் அசைவுகள்.
    - அனைவரையும் கவரும் விதமான உரையாடுவதற்கான மொழித்திறன்
    - எதையும் உறுதியாகப்பார்க்கும் மனப்பாங்கு.
    - பிறருக்கு ஊக்கமளித்து தானும் ஊக்கத்துடன் செயற்படல்.
    - எடுத்த பணியை குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்கும் மேலாண்மைத்திறன்.
    - வளங்களை உத்தமமாகப் பயன்படுத்தும் திறன்.
    - வன்முறையற்ற சூழலை உருவாக்கும் திறன்.
    - தொழிலை சிறப்பாக முன்னெடுக்கவும், நிர்வாகம், முகாமைத்துவத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய தலைமைத்துவத்திறன்.

அந்த வகையில் பாடசாலை கலைத்திட்டத்தின் ஊடாக எவ்வாறு மென்திறன்களை வளர்த்துக்கொள்ளளாம் என்று நோக்குவோம்.

கலைத்திட்டம் மாணவரின் உடல்வளர்ச்சி, உளவளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, சமூகவளர்ச்சி ஆகியவற்றை மையமாக கொண்டு திட்டமிடப்படுவதாகும். இது மாணவர்களிடையே மனவெழுச்சிக்கும், படைப்பாற்றலுக்கும், நுண்ணறிவிற்கும் முன்னுரிமை கொடுக்கும் வடிவமாகும்.

பாடசாலைக்கலைத்திட்டமானது பாடக்கலைத்திட்டம், இணைப்பாட விதானக்கலைத்திட்டம். மறைக்கலைத்திட்டம் என மூன்று பிரிவுகளாக காணப்பட்டாலும் மென்திறன்களை வளர்ப்பதில் பாடக்கலைத்திட்டமே மிகவும் கூடிய பங்களிப்பை வழங்குகிறது.

அந்த வகையில் மென்திறன்களை கலைத்திட்டத்தினூடாக பின்வருமாறு வளர்த்தெடுக்கலாம்.

1. தெரிவுசெய்யப்பட்ட ஒரு பாடத்தின் ஊடாக முன்னெடுத்தல்.

2. பாடக் கலைத்திட்டத்தில் உள்ள அனைத்து பாடங்களினூடாக முன்னெடுத்தல்.
3.
4. பாட மேம்பாட்டு நிகழ்ச்சிகளினூடாக முன்னெடுத்தல்.

   உ+ம்: விஞ்ஞான தினம், விஞ்ஞான கன்காட்சி, வானியல் பாசறை, சுற்றுலா, களஆய்வு.

5. பாடசாலை நிகழ்வுகளினூடாக வளர்த்தல்.

   உ+ம்: இல்ல விளையாட்டுப்போட்டி, தமிழ்தினம், மாணவர்களின் ஒன்றுகூடல், மன்றச்செயற்பாடுகள்.

ஒரு பிள்ளையின் ஆளுமை விருத்தியின் போது அவர்களுடைய பௌதீக அறிக்கை சமூக மனப்பாங்கு சார்ந்ததிறன்கள் அவர்களது பிள்ளைப்பருவத்திலிருந்தே படிப்படியாக விருத்தியடைய தொடங்குகின்றனர். எனவே இவற்றைவளர்ப்பதில் பாடசாலைகளின் பங்கு மிக முக்கியமாக இருக்கின்றது.

நன்றி…



M.ஷாந்தன் சத்தியகீர்த்தி (MA,M.Ed,SLPS)
உதவிஅதிபர்.
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

# Artificial Intelligence

Artificial Intelligence or AI is a revolutionary technology that allows machines to undertake tasks that usually need human intelligence.

Artificial Intelligence refers to the intelligence of machines. This is in contrast to the natural intelligence of humans and animals. With Artificial Intelligence, machines perform functions such as learning, planning, reasoning and problem-solving. Most noteworthy, Artificial Intelligence is the simulation of human intelligence by machines. It is probably the fastest-growing development in the World of technology and innovation. Furthermore, many experts believe AI could solve major challenges and crisis situations.

Our life in this modern age depends largely on computers. It is almost impossible to think about life without computers. We need computers in everything that we use in our daily lives. So it becomes very important to make computers intelligent so that our lives become easy. Artificial Intelligence is the theory and development of computers, which imitates the human intelligence and senses, such as visual perception, speech recognition, decision-making, and translation between languages. Artificial Intelligence has brought a revolution in the world of technology.

AI can greatly increase the rate of work in manufacturing. Manufacture of a huge number of products can take place with AI. Furthermore, the entire production process can take place without human intervention. Hence, a lot of time and effort is saved.Artificial Intelligence is a revolutionary force that will shape the future of mankind. To harness the maximum benefits of this technology, it is advisable to use it wisely. Any development or innovation in AI technology must be directed towards the betterment of society and aim to protect the privacy of the weakest section of society.

To sum it up, Artificial Intelligence looks all set to be the future of the World. Experts believe AI would certainly become a part and parcel of human life soon. AI would completely change the way we view our World. With Artificial Intelligence, the future seems intriguing and exciting.

AI has a long history of concepts and research that have bought many systems into fruition. Intelligent software and algorithms are programmed into many of the systems we use daily, and it seems that artificial intelligence is the wave of the future. Further research on this topic is imperative to helping others gain knowledge of this trending phenomenon, which could lead to better understanding and more informed decisions on whether AI is beneficial or dangerous to humans. The rise of artificial intelligence is a global societal issue for all because AI impacts everyone around the world. There are countless advancements with artificial intelligence, and as the projects get better, more data and more in-depth learning is needed for AI to work at its best. Deep learning and neural networks mimic the biological structure of the human brain, allowing artificial intelligence to learn without human input. From this singularity can occur, pushing AI to the evolution of superintelligences that become smarter than humans. However, instead of taking over humanity, AI and humans can merge intelligence, and work together, integrating for maximum efficiency. AI confinement protocols will serve as the solution to slow down the effects of singularity and allow humans to safely benefit from the superintelligences formed.

T.Priyanthana
[ Diploma in Teaching ICT , BIT in Colombo University ( R )]
Kn/Mulankavil Maha Vidyalayam.



## இளமைக்காலம்

அகிலத்தை அசைத்துப் பார்க்க
ஆவலாய் எழுந்த ஆயுதமோ?
இன்னல் அனைத்தும் தனக்குள் ஒழித்த
ஈராயிரம் கதை பேசும் பேரொளியோ?

உன்னை அறிய காலம் எடுக்கும்
வெற்றி காண சில நேரம் எடுக்கும்
இருளை அகற்றி வை படியை அளந்து வை

நவீனத்தில் சிறகுடைந்த இளமை பருவம்
காப்பாரின்றி சிறகடிக்க மறுக்கின்றதே
மாற்றம் ஒன்றே மாறாதது
ஏற்று நடந்தால் உயருமே வாழ்வானது

தொலைபேசி தேடாதே
தொலைந்து போய்விடும் உன் பெயரே
போதையை நாடாதே
குலைந்து போய்விடும் உன் வாழ்வே

நூலகம் சென்று பார்
உன் புகழ் பாடும் ஊரே
கல்வி கற்று பார்
உன் புகழ் பேசும் நாடே

போதை அரக்கனின் பிடியில்
பேதைகளாய் வலம்வரும் இளையோரே
உன் அடிமை விலங்கை உடைத்தெறிய
போதையை தகர்த்தெறி

சாதனை வீரனே!
இளமைக்காலத்தை தவற விடாதே
சரித்திர நாயகனே!
இளமையில் சாதிக்க மறவாதே



இ.நிதுசா.
மாணவத்தலைவி,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

## நபீல்ட் பாடசாலையில் தலைமைத்துவ பயிற்ச்சி








## பள்ளிப் பருவம்

தாயின்கருவறையிலேயே - உன்னிடம்
தத்துக் கொடுத்து விட்டார்களோ என்னவோ
என் தாய்க்கும் எனக்கும் இருக்கும் பந்தத்தைவிட
பலமடங்கு உறுதியாய் உன்னோடு
மனம் பற்றி வைத்திருக்கிறேன் போலும்!

தாயின் முதல் ஆறு ஆண்டுகளின் வளர்ப்பும் சரி,
உன்னோடு கடந்த பதின்மூன்று ஆண்டுகளின் உறவும் சரி,
தாய்ப்பாசத்தை மிஞ்சி விட்டாயே, பள்ளியே!
உன் அரவணைப்பின் ஆழம் தான் என்னவோ!

நான் கற்ற முதல் குருவும் உன்னிடமே,
நாள் பழகிய முதல் தோழமையும் உன்னிடமே,
உன் வாயிலில் காலடி பதித்தவுடன்
இனம், மொழி, மதம் கடந்த
உறவுகளை உணர்த்தி விட்டாயே!

பள்ளிப் பருவத்தின் வெள்ளைச் சீருடையும்,
வெள்ளைக் காலுறையும் அணிந்து வருகையில்
பாரமாக தோன்றிய உன் கட்டுப்பாடுகள்
அன்று சிறைச்சாலை போலவே தோன்றியது!
இன்றோ, அழகிய பூங்கா - என
உலகறிய உணர்த்தி விட்டாய் என் பள்ளித்தாயே!

காலம் பல நூறுகள் கடந்து ஓடினாலும்
வாழ்வு தன் பயணத்தை தாண்டினாலும்
அழியாத அறிவுக் கோலமும் நீ,
மறக்காத மனதின் நினைவுகளும் நீ!

அள்ளித்தளுவிய அட்நாட்களை மீண்டும்
எண்ணிப் பார்க்கையில் - விழிகளில்
கண்ணீர் துளிகளும் நினைவுகளுமே
உனக்கு காணிக்கையாகின்றது, தாயே!



ஸ்ரீ.ஆரணிகா.
மாணவத்தலைவி,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

## போதையை ஒழிப்போம்

ஆதிக்கம் கொண்ட அரக்கனோ?
ஆயிரம் மின்னல் கொடுக்கும் பேரிருளோ?
இருபத்தோராம் ஆண்டு சுமக்கும்
ஈராயிரம் சோகங்களோ?

காவல் செய்ய காவலாளி இல்லை
போதையை அழிக்க மேதையும் இல்லை
சிறகுடைந்த கல்விப்பருவம்
சிறகடிக்க காலம் வருமோ? இந்நாளில்

போதையின் பாதையில்
ஏதிலியாய் வலம் வரும் மானிடா!
போர் செய்யத் தெரிந்தும்
போதையோடு தோற்றது ஏனடா!

இன்றைய நாள் ஏனோ!
அது இருள் காலம்
ஒளி கொண்டு தேடாவிட்டால்
இழப்பாயோ உன் எதிர்காலம்

போதையை பாவிக்கும் பேதையே
உயிரை இழக்க வா முயல்கிறாய்
ஏதிலியாய் வலம் வரும் எமனிடம் சீடனே
எதற்காக உயிரை மாய்க்கின்றாய்

மதுவை மறந்து விடு

போதையை துறந்து விடு

ஒன்றாக எழுவோம்

போதையை விரட்டி அவாமைதியாம் வாழ்வோம்



கு.ஜினோத்.
மாணவத்தலைவன்,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

## 13 வருட உத்தரவாதம் அளிக்கப்பட்ட கல்வி திட்டம்

13 வருட உத்தரவாதம் அளிக்கப்பட்ட கல்வி திட்டமானது கல்வி அமைச்சினால் அறிமுகம் செய்யப்பட்டது இத்திட்டமானது 17ஆம் ஆண்டு பரிசோதனை செய்ற்திட்டமாக பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டு 2019ஆம் ஆண்டு முதல் உத்தியோகபூர்வ கல்வி செயற்திட்டமாக அனுமதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தபட்டுவருகின்றது 13 வருட உத்தரவாதம் அளிக்கப்பட்ட கல்வி திட்டத்தின் பிரதான நோக்கம் பாடசாலை கல்வி முறையில் கா.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றி சித்தி அடைய தவறிய மாணவர்களை கல்வி முறைக்குள் உள்ளீர்த்து மாணவர்களின் சுயதிறனை அடையாளம் கண்டு அதனை விருத்தி செய்யும் முகமாக திறன் விருத்தி தொழிற்கல்வியினை வழங்கி மாணவர்களை எதிர்காலத்தில் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவது நோக்கமாக அமைகின்றது

பாடசாலை கல்வி முறையில் கா.பொ.த(சா/த) இடைவிலகும் மாணவர்களினால் அதிகரிக்கும் சிறுவர் குற்றங்களை தடுத்தல் மாணவர்களை எதிர்கால தொழிலுக்கும் வேலை உலகிற்கும் சவால்களை எதிர் கொள்ளக்கூடிய நற்பிரஜைகளை உருவாக்குவது 13 வருட உத்திரவாதமளிக்கபட்டகல்வி திட்டத்தின் நன்மையாக அமையும்

க.பொ.த உயர்தர துறையில் கணித விஞ்ஞானக் கலைவர்த்தகம் உயர்தர தொழில்நுட்பம் போன்ற துறைகளுக்கு மேலதிகமாக 13 வருட உத்தரவாதம் அளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

13 வருடமளிக்கப்பட்ட கல்வித்திட்டம் இரு கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது முதலாவது வருடம் பாடசாலை கல்வி செயற்பாடும் இரண்டாம் வருடம் மூன்றா நிலை கல்வி ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்ட கற்கை நிறுவனங்களில் தொழிற் பயிற்சி உடனான கல்வியும் வழங்கப்படும் பாடசாலை கற்பித்தல் காலத்தில் பாடத்திட்டங்கள் இரண்டு வகையாக வகைப்படுத்தப்படும் பொது பாடங்கள், பிரயோக பாடங்கள் பொதுப் பாடங்கள் ஒன்பதாக காணப்படுவதுடன் முதலாம் எல்லாம் தவணையில் நிறைவு செய்யப்படும் மாணவர் மொழி அறிவு ஆற்றல் சிந்தனை தொழிலுக்கு தயார் செய்தல் போன்ற திறன்கள் மாணவரிடத்தை வளர்க்கப்படும் பிரயோக பாடங்கள் 28 ஆகும். அதில் மூன்று பாடங்களை மாணவர்கள் தெரிவு செய்து கற்க வேண்டும் இதில் பிரயோக பாடங்கள் இரண்டாம் மூன்றாம் தவணைகளில் கற்பிக்கப்படும் இதில் மூன்று பாடங்களில் விரும்பி ஒரு பாடத்தினை தெரிவு செய்து அப்பாடநெறியினை தொழிற்கல்வி மூன்றாம் நிலை கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் கற்க நெறியுடன் தொடர்பான பாடநெறியைதெரிவு செய்து கற்க வேண்டும் பின்னர் மாணவர்களுக்கு தொழில் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்று முடிந்தத கற்பித்தல் செயற்பாட்டுக்கு பின்னர் தொழிற் பயிற்சிக்காக (On The Kop Training) க்கு தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு இணைப்பு செய்யப்படுவர் யுேஜவ்யு நிறுவனத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டு வெற்றிகரமாக நிறைவு செய்யும் ஆண்களுக்கு NVQ LEVEL -4 நான்கு சான்றிதழ் வழங்கப்படும்

13 வருட உத்தரவாதம் அளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சி திட்டம் மூலம் மாணவர்களுக்கு பல்வேறு சலுகைகள் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்றது

1. செயல்முறை கற்பித்தலாக அமைந்த பாடத்திட்ட வடிவமைப்பு
2. ளுஅயசவ உடயளள சழழஅ வசதிகள்
3. கணினி ஆய்வுக்கூடவசதிகள்
   VR KITS
4. வகுப்பறைகள்
5. மூன்றாம்நிலை கல்வி நிறுவனங்களில் இணைப்பு செய்யப்படும் காலம் தொடக்கம் முடியும் வரை நான் நாளொன்று 500 ரூபாய் கொடுப்பனவு
6. பேருந்து மூலம்வருகை தரும் மாணவர்களுக்கு பருவகால சீட்டுகளை வழங்குதல்
7. NVQ சான்றிதழை பெற்று மாணவர்களுக்கான சுயதொழிலை ஆரம்பித்ததற்கான கடன் திட்டங்கள்
8. வெளிநாட்டு கட்டைகள், வேலை வாய்ப்புகள்


பாடசாலைமட்டத்தில் 13 வருட கல்வி நிகழ்ச்சி திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடுகள்
போன்ற சலுகைகள் வழங்கப்படுகின்றது.


13 வருட உத்தரவாதம் அளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சி திட்டமானது எதிர்கால வேலை உலகுக்கு மாணவர்களை தயார் படுத்தும் ஓர் த நினைச்சு திட்டமாக அமைவதுடன் இதில் மாணவர்கள் பங்கு பற்றி பயன்பெறுவது அவசியமான ஒன்றாகும்


நன்றி



K.கபேசன்.
ஆசிரியர்,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.






இ.ஜயந்தகுமார
கிளி/முழங்காவில மகாவித்தியாலயம்,
மாணவத் தலைவன்,
(கணிதப்பிரிவு A/L 2024).

# கல்பனா சாவ்லா

## பிறப்பு

கல்பனா சாவ்லா அவர்கள் இந்தியாவில் உள்ள ஹரியானா மாநிலத்தில் கர்ணல் என்ற மாவட்டத்தில் ஜூலை 1 1961ம் ஆண்டு பனாரஸ் லால் சாவுலா விற்கும் சன் லோகிதா நேவிக்கும் மகளாக ஒரு பஞ்சாபி குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு சுனிதா மற்றும் தீபா என்ற இரண்டு சகோதரிகளும், சஞ்சய் என்ற சகோதரனும் இருந்தனர்.

## கல்வி

கல்பனா சாவ்லா தனது கல்வியினை கர்ணலில் உள்ள தாகூர் (Tagore Baal Niketan Senior secondary School) அரசு பள்ளியல் தொடங்கினார்.இவர் 1982 ஆம் ஆண்டில், சண்டிகரில் உள்ள பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் வான்வெளிப் பொருளியலில் தனது இளங்கலை பொருளியல் பட்டத்தை பெற்றார். அதே வருடம் அவர் அமெரிக்கா சென்றார். அர்லிங்க்டோனில் உள்ள டெக்சாஸ் பல்கலைக்கழகத்திலிருந்து விண்வெளி பொருளியல் முதுகலை பட்டத்தை 1984 ஆம் ஆண்டு பெற்றார். அதன் பின்னர் பௌல்தேரில் உள்ள கொலோரடோடோ பல்கலைக்கழகத்தில் 1986இல் இரண்டாம் முதுகலை பட்டத்துடன், விண்வெளி பொருளியல் முனைவர் பட்டத்தை 1988 ஆம் ஆண்டு பெற்றார்.

பின்னர் அதை வருடம் நாசா அமெதஸ் ஆராய்ச்சி கூட்டத்தில்(NASA Ames Research Centre) ஓவர்செட் மெதோட்ஸ் இன்க் (Overset Methods, Inc)இல் துணைத் தலைவராக பொறுப்பேற்ற கல்பனா,செங்குத்தாக குறுகிய இடத்தில் புறப்படுதல் மற்றும் தரையிறங்கல் பற்றி (CFD) ஆராய்ச்சி செய்தார். விமானம் மற்றும் கிளை டோர்கலலை(Gliders) ஒட்ட கற்றுக் கொடுக்க சாவ்லா தகுதி சான்றிதழ் பெற்றார். ஒன்று மற்றும் பல பொறிகள் பொருத்திய விமானங்கள்,கடல் விமானங்கள் மற்றும் கிளை போர்க்களையும் ஒட்ட அனுமதி பெற்றார்.

## கல்பனாவின் நாசா பயணம்

கல்பனா மார்ச் 1995இல் நாசா விண்வெளி வீரர் பயிற்சி குழுவில் சேர்ந்தார். இவர் 1996 ஆம் ஆண்டு அவரது முதல் பயணத்திற்கு தேரிவு செய்யப்பட்டார். கொலம்பியா விண்வெளி ஊர்த்தியான STS-87 பயணித்த ஆறு வீரர்களில் ஒருவரான கல்பனா சாவ்லாவின் இந்த முதல் பயணத்திற்கு இவர் நவம்பர் மாதம் 19ஆம் நாள் 1997 ஆம் ஆண்டு முதல் ஆயத்தமானார். 1984ஆம் இல் சேவியர் வின் களத்தில் பயணித்த ராகேஷ் சர்மாவை அடுத்து விண்வெளி சென்று முதல் இந்திய பெண் வீராங்கனை என்று அழியா பெருமையும் இவர் பெற்றார். கல்பனாவின் முதல் பயணத்திலேயே அவர் 360 மணி நேர விண் வெளியில் இருந்து 10.67 மில்லியன் கிலோ மீட்டர்கள் பயணித்து பூமியை 252 முறைகள்

வலம் வந்துள்ளார். இதற்காகவே அவர் விண்வெளியில் 372 மனுத்தியாலங்கள் இருந்துள்ளார்.

STS-87 இன் போது வின்ஸ்டன் ஸ்ஹார்ட் மற்றும் தகாவோ டோய் விண்வெளியில் பயணித்துக் கொண்டிருந்த ஸ்டார்டன் எனும் செயல் குறைபாட்டில் இருந்து செயற்கைக்கோளை கட்டுப்பாட்டில் கொண்டு வர காரணமாக இருந்தார்.

STS-87 க்கு பிறகு கல்பனா தொழில்நுட்ப வல்லுநராக விண்வெளி அலுவலகத்தில் நாசாவினால் நியமிக்கப்பட்டார் அவரது செயலைப் பாராட்டி அவரது சக வள்ளுவர்களை ஒரு விதையும் வழங்கி கௌரவித்தனர்.

**கல்பனாவின் கொலம்பியா விண்கல நிகழ்வின் போது**

முதல் விண்வெளி பயணத்தை வீற்றிகரமாக முடித்த கல்பனா சாவ்லா அடுத்த ஐந்து ஆண்டுகளில் தன்னுடைய இரண்டாவது பயணத்திற்கு தயாரானார்.2000 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளக்கூடிய இந்த பயணம் பலதரப்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகளால் காலம் கடத்தப்பட்டது பின்னர் 2003 ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் தேதி விண்வெளி ஆராய்ச்சிக்காக அமெரிக்காவின் சென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ் டி எஸ் 107 (STS-107)அனுப்பி வைக்கப்பட்டது. இந்திய வம்சாவளி பெண்ணாகிய கல்பனா சாவ்லா உள்ளிட்ட ஏழு பேர் அதில் பயணித்தனர். 16 நாள் ஆய்வை முடித்து வெற்றிகரமாக பூமிக்கு திரும்பிய அவர்கள் சென்ற விண்கலம் அமெரிக்காவின் டெக்ஸ்ட்டா வான் பரப்பில் வெடித்துச் சிதறியதால் கல்பனா உட்பட ஏழு விலைமதிப்பற்ற விண்வெளி வீரர்கள் பலியாகினர். ஒரு சாதாரண பள்ளியில் படித்து, பலர் வியக்கும்படி தன் கனவுகளை கனவாக்கி வாழ்ந்து காட்டியவர் கல்பனா சாவ்லா பெண்ணினத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய இவர் இந்தியாவிற்கு உலகப் புகழ் சேர்த்தவர் என்றால் அது மிகையாகாது. ”கனவுகளை கண்டு அந்த கனவுகளை நினைவாக்குவதற்கு விடாமுயற்சியோடு முழு மனதோடும் செயற்பட்டால் வெற்றி நிச்சயம் ”என்ற உண்மையை உணர்த்திய வீரப் பெண்மணி கல்பனா சாவ்லா அவர்கள்.

**கல்பனா சாவ்லாவுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரங்களும் விருதுகளும்.**

1.நியூயார்க் நியூயார்க்கில் உள்ள ஒரு தெரிவிக்கு ”கல்பனா வே”என பெயரிடப்பட்டது.

2. கர்நாடக அரசாங்கம் இளம் பெண் விஞ்ஞானிகளை ஊக்குவிக்கும் முகமாக 2004 ஆம் ஆண்டிலிருந்து ”கல்பனா சாவ்லா”விருது வழங்கி வருகிறது.3. நாசா ஆய்வகம் கல்பனாவின் நினைவை பறைசாற்றும் விதமாக ஒரு அதிநவீன கணினியை அர்ப்பணித்துள்ளது.

4.காங்கிரசினால் ஸ்பேஸ் மெடல் ஆப் ஒனர் விருது வழங்கப்பட்டது.

5.நாசா ஸ்பேஸ் பிளைட் மெடல் வழங்கப்பட்டது.

6. நாசா டிஷ் டிங்குவிஸ்ட் சர்வீஸ் மெடல் வழங்கப்பட்டது.

இந்தியாவில் பல கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கப் பொது நிறுவனங்களுக்கு கல்பனா சாவ்லின் நினைவை பறைசாற்றும் வகையில் பெயர் கூறப்பட்டுள்ளது.

நன்றி.....



க.துவாரகன்.
மாணவத் தலைவன்,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

## உடற்பயிற்ச்சியின் அவசியமும் உடல் ஆரோக்கியமும்

இன்றைய கால சமுதாயத்தில் மிக முக்கியமான நோக்காக கொள்ளப்படுவது "உடற்பயிற்ச்சி" ஆகும். வாழ்வின் சிறப்பினையும் உணர்ச்சியையும் எடுத்து காட்டுகின்றது. ஒருவருடைய வாழ்வின் மன நின்மதியை ஏற்படுத்துவது உடற்பயிற்ச்சியாகும். இவ் உடற்பயிற்ச்சியினால் வாழ்வில் இயல்பாகவே ஆரோக்கியத்தினை பேணமுடியும். இன்று நம்முடைய வாழ்வில் உடலில் பல தேவைப்பாடுகள் உள்ளன என்பதை நாம் அறிவோம். இதனடிப்படையில் உடற்பயிற்ச்சியினால் நாம் அடைந்து கொள்ளும் சாதகமான விடையம். பாதகமான விடையம் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி நோக்கிக்கொள்வதனை அறியலாம்.

உடற்பயிற்ச்சியினால் நாங்கள் அடைந்து கொள்ளும் நண்மை தொடர்பான விடையம் நோக்கின், வாழ்வை செம்மைப்படுத்தும் முகமாக பல்வேறு நண்மைகளினை தருகின்றது. குறிப்பாக மன நிம்மதி உட்பட நிறைவான உணர்வினை தருகின்றது மற்றும் உடற்பயிற்ச்சியினால் உடலில் ஆரோக்கியம் பேணப்படுகிறது. சிறியவர் முதல் பெரியவர்கள் வரை இவ் உடற்பயிற்ச்சியின் அவசியத்தினை இனங்காண முடியும். முதியவர்கள் கடும் உடற்பயிற்ச்சியினை ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறைவாக காணப்படும்.ஏனெனில் வயதினை இழந்தால் கடினமாக இருக்கும்.

சிறியவர்கள் உடற்பயிற்ச்சியில் ஈடுபடும் போது பல்வேறு திறன்களை கொண்டு வரும் உடல் திறன், குரல் திறன், பயிற்ச்சி திறன் போன்றவை உண்டாகும். உடற்பயிற்ச்சியினை சிறியவர்கள் சுறுசுறுப்பாக மேற்கொள்பவர்கள் அதிகம் உண்டு. ஏனெனில் விளையாட்டு செயற்பாட்டில் ஈடுபடும்போது அவர்களுக்கு சிறந்த உடற்பயிற்ச்சி அவசியம். அதனால் தான் நிறைவான பெறுபேற்றை அடையமுடியும் ஆகவே **"ஒவ்வொரு வெற்றக்கும் ஒவ்வெரு தவம் உண்டு"** என்ற கொள்கையினை முன்வைக்கும் முகமாக பயிற்ச்சிக்கு உட்படுத்தப்படுகின்றோம்.

உடல் ஆரோக்கியத்தினை பேணுவதன் முக்கியம் தொடர்பான விடையம் பற்றி கூறுகையில், உடற்பயிற்ச்சியோடு சிறந்த உணவுப்பழக்கவழக்கத்தினை பின்பற்றுவதன் முகமாக சிறந்த ஆரோக்கியமான உடற்தகமையினை பெற்றுக்கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்களுடைய உணவுப்பழக்கவழக்க முறை சிறந்த எடுத்துக்காட்டாகும். அக் கால மனிதர்கள் தானியங்கள்,கிழங்குகள் என்பவற்றினூடாகவே ஆரோக்கியத்தினை பெற முடிந்தார்கள்.

அக் காலத்தில் தானியவகைகளான குரக்கன், பயறு என பல்வேறு உணவுப்பழக்கவழக்கத்தினை பின்பற்றியே உடல் ஆரோக்கியத்தினை பேணி வந்தனர். ஆகவே நாங்களும் அக்கால மனிதர்களை போல் கடினமாக உடல் ஆரோக்கியத்தினை பேணாமல் சிறந்த உடற்பயிற்ச்சியினால் அடைய முடியும் என்பதை முதலில் உணர்வோம். உடற்பயிற்ச்சியினூடாக மனதில் தேவையில்லாத சிந்தனையினை நீக்க முடியும். அதாவது ஒரு வயதினை தாண்டிய

ஒவ்வொருசராசரி மனிதருக்குள் தேவையில்லாத சிந்தனைகள் உருவாக நேரிடும். அதனையும் உடற்பயிற்ச்சியினுாடாக தீர்த்துக்கொள்ள முடியும்.

ஆரோக்கியமான வாழ்வை செயற்படுத்தி கொள்வதற்கு மனிதன் எவ்வளவு பாரிய விடயங்களில் ஈடுபடுத்தி கொண்டாலும் உடற்பயிற்சியானது சிறந்ததீர்வினை அளிக்கும் அதாவது, மனிதன் தன்னை தானே துாய்மைப்படுத்தி கொள்வதற்காக இச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றான். உண்மையில் அது சிறந்த விடையமாகும். ஆதனாலேயே மாணவர்களாகிய எங்களிடம் உடற்பயிச்சியில் தகமைகள் காணப்படுமாயின் சமுதாயத்தில் ஒரு சிறந்த நற்பிரயையாக நம்மை மாற்றிக்கொள்ள முடியும்.

இவ் உடற்பயிச்சியானது மனித வாழ்வின் நன்மைக்கு சாதகமாக காணப்பட்டாலும் ஏதோ ஒருவிதத்தில் அது பாதகத்தினையும் எற்படுத்திக்கொள்கிறது. அதாவது உடற்பயிற்ச்சியில் ஈடுபடும் ஒருவன் எதோ ஒரு வகையில் பாதகத்தினையும் அதிகரிக்கின்றான். அதாவது தன்னுடைய நேரத்தினை வீணாக்கி அச் செயற்பாட்டில் ஈடுபடுத்திக்கொள்கின்றான் இதனால் உடலில் வலிகள் அதிகரித்து உடல் தளர்வடைந்து செல்லும் கூடுதலாக சிறியவர்களுடைய செயற்பாட்டில் காணமுடியும்.

வெற்றியினை அடைந்து கொள்ள திட்டம் தீட்டிய பிற்பாடு நன்மை நடந்தாலும் தீமை நடந்தாலும் அதனை கற்றுக்கொள்கின்ற மனப்பாங்கினை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். ஆகவே உடற்பயிற்சியினால் பல நன்மைகளை கைக்கொள்வதனை போன்ற சில தீமைகள் உடல் ரீதியாக எற்படும் வகையில் அதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உடற்பயிற்ச்சியின் இறுதி விடையமாக நோக்கின், ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் விளைவு என்பது கிடைக்கும். அதுவே ஒரு சிறந்த செயற்பாடாகும். இதனடிப்படையில் இவ் உடற்பயிற்ச்சியினுாடாக நாம் அடையும் விளைவாக கருதப்படுவது சிறந்த நோய் இல்லாத உடலினைப்பெற்று மகிழ்ச்சி அடையக்கூடிய வாழ்வினை உருவாக்கிக்கொள்ள முடியும் ஆகவே சிறந்த உடற்பயிற்ச்சியினைப்பெற்று ஆரோக்கியமான வாழ்வை பெறுவோம்.

நன்றி



ரவிக்குமார் எப்சிபா.
மாணவத்தலைவி,
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்.

# முழவம்

# 2024

## நன்றியுரை

2024 ஆம் ஆண்டு “முழவம்” என்னும் மலருக்கு வாழ்த்துச் செய்திகளை வழங்கிய அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், உதவி அதிபர்கள் அனைவருக்கும் மற்றும் தங்களுடைய ஆக்கங்களை தந்துதவிய மாணவத்தலைவர்கள், ஆசிரியர்கள், மற்றும் அன்பளிப்பு வழங்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் இம் மலரை அழகுடன் அச்சிட்டுத் தந்த மதி கலர்ஸ் அச்சகத்தினருக்கும் உள்ளம் கனிந்த நன்றிகள்.





